கூட்டுறவு
(கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர்
பாதுகாப்புத் துறை)

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2015–2016

**மானியக் கோரிக்கை எண். 12**

## செல்லூர் கே. ராஜூ
## கூட்டுறவுத் துறை அமைச்சர்

தமிழ்நாடு அரசு
**2015**

**பொருளடக்கம்**


| இயல் எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| | முகவுரை | **1-3** |
| I. | கடன் கூட்டுறவுகள் | **4–34** |
| II. | கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | **35–57** |
| III. | நுகர்வோர் கூட்டுறவுகள் | **58–64** |
| IV. | பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவு | **65–70** |
| V. | கூட்டுறவு கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி | **71–77** |
| VI. | கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் | **78** |
| VII. | ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் | **79–81** |
| | முடிவுரை | **82** |

# முகவுரை

**1.** இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் தோன்றுவதற்கும், தழைத்தோங்குவதற்கும் தமிழ்நாடு தான் முன்னோடி மாநிலமாகத் திகழ்கின்றது. இந்தியாவில் முதல் வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம், தமிழ்நாட்டில் திருவள்ளூர் மாவட்டத்தில் திரூர் என்ற கிராமத்தில் **1904**ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதே ஆண்டில் திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் பெரிய காஞ்சிபுரம் நகரக் கூட்டுறவு வங்கி ஆகியன தொடங்கப்பட்டன. இன்று, இவ்வியக்கம் தமிழ்நாட்டில் **23,661** சங்கங்களாகப் பரிணமித்து சிறப்போடு இயங்கி வருகின்றன என்பது பெருமைக்குரியதாகும். இக்கூட்டுறவு அமைப்புகள் மக்களுக்கு சேவை செய்வதையே முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றன.

**2.** வேளாண் உற்பத்தியை அதிகரிக்க பயிர்க்கடன், அதிலும் உரிய காலத்தில் கடனை திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்க் கடன், விவசாய பெருமக்கள் வாழ்வாதாரத்தை பெருக்கிட வேளாண் சார்ந்த முதலீட்டுக் கடன், வேளாண் பொருட்களை பாதுகாக்க ஊரக கிடங்கு, உரம், விதை மற்றும் வேளாண் கருவிகள் வழங்குதல் என வேளாண் வளர்ச்சிக்கும், அதன் மூலம் ஊரக வளர்ச்சிக்கும் உறுதுணை புரிவதில் கூட்டுறவுச் சங்கங்கள் முன்னிலையில் உள்ளன. இதுமட்டுமின்றி ஒட்டுமொத்த வளர்ச்சி அடையும் நோக்கில் கடன் வாங்கும் திறனை அதிகரிக்க மாற்றுத் திறனாளிகளுக்கு பங்கு மூலதன மானியம் மற்றும் மகளிர் மேம்பாட்டிற்கு மகளிர் தொழில் முனைவோர் கடன், பணிபுரியும் மகளிர் கடன், ஆதிதிராவிடர்/ பழங்குடியினருக்கு வட்டியில்லா பங்கு மூலதனக் கடன் மற்றும் பங்கு மூலதன மானியம் வழங்கும் திட்டங்களை கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுத்தி வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலத்தில் பெருவாரியான பொது விநியோகத் திட்டக் கடைகளை நடத்தி வருகின்றன.



**3.** மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அவர்களால் விளைவிக்கப்படும் சாமை, வரகு, புளி மற்றும் தேன் போன்ற பொருட்களுக்கு இலாபகரமான விலை கிடைப்பதை உறுதி செய்ய கூட்டுறவு நிறுவனங்கள் உதவுகின்றன. அவ்வாறு விளைவிக்கப்படும் பொருட்களைப் பொது வணிக முத்திரையிட்டுச் சந்தைப்படுத்தி வருவதுடன் நிதியுதவியும் வழங்கப்படுகிறது.

**4.** மக்களின் அவசரத் தேவைக்கு நகைக்கடன், சிறுவணிகக் கடன், வீட்டுவசதி, வீட்டு அடமானக் கடன் மற்றும் சிறு போக்குவரத்து வாகனக் கடன் என மக்களுக்கான பல நலத் திட்டங்களைக் கூட்டுறவு நிறுவனங்கள் சிறப்புடன் செயல்படுத்தி வருகின்றன. கூட்டுறவு நிறுவனங்களில் உள்ள சொத்துக்களை பாதுகாக்கும் பொருட்டு, பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறைகள், உட்சுற்று கண்காணிப்பு காமிராக்கள் (CCTV)

போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**5.** காய்கறி விலையைக் கட்டுப்படுத்த விவசாயிகளையும் நுகர்வோரையும் நேரடியாக இணைக்கக் கூடிய **பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள்** திறக்கப்பட்டதன் மூலம், நுகர்வோர் மற்றும் விவசாயிகளின் நலன் பாதுகாக்கப்படுகிறது. தரமான, பசுமையான காய்கறிகள் விவசாய விளை நிலங்களிலிருந்து நேரடியாக கொள்முதல் செய்வதுடன் விவசாயிகளுக்கு கொள்முதல் செய்யும் இடத்திலேயே பணப்பட்டுவாடா செய்யப்படுகிறது. இக்கடைகள் மூலம், தரமான காய்கறிகள், நியாயமான விலையில் நுகர்வோரை சென்றடைகின்றன.

**6.** **“அம்மா மருந்தகங்கள்”** மூலம் பொதுமக்களுக்கு நியாயமான விலையில் தரமான மருந்துகள் கிடைக்கச் செய்திருப்பது, கூட்டுறவு, மக்கள் நலனுக்காக செயல்படுகின்றது என்பதற்கு மற்றொரு எடுத்துக்காட்டாகும்.

**7.** கூட்டுறவு என்பது ஒரு மக்கள் இயக்கம். பல ஆண்டுகளுக்குப் பின்னர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தமிழ்நாடு கூட்டுறவு தேர்தல் ஆணையம் அமைத்து, ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களால் கூட்டுறவுச் சங்கங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.



இயல் – I

# கடன் கூட்டுறவுகள்

## 1. முன்னுரை

தமிழ்நாட்டில் நீண்ட காலமாகச் செயல்பட்டு வரும் கூட்டுறவுக் கடன் அமைப்புகள் பழமைவாய்ந்த, மக்களுடன் நெருங்கிய தொடர்புடைய மிகப் பெரிய கடன் அமைப்புகளாக உள்ளன. கிராம மற்றும் நகர்ப்புற மக்களுக்குத் தேவையான கடன் உதவிகளை வழங்கி வருகின்றன. தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் நான்கு வகைப்படும். அவை, குறுகிய கால கூட்டுறவுக் கடன் அமைப்பு, நீண்டகாலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு, நகரக் கூட்டுறவு கடன் அமைப்பு மற்றும் பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணய சங்கங்கள்.

## 2. குறுகிய கால கூட்டுறவுக் கடன் அமைப்பு

குறுகிய கால கூட்டுறவு கடனமைப்பில், மாநில அளவில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியும், மாவட்ட அளவில் 23 மத்திய கூட்டுறவு வங்கிகளும், கிராம அளவில் 4,490 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும் திறம்பட கடன் சேவையை வழங்கி வருகின்றன. இவை விவசாயப் பெருமக்களின் வேளாண் கடன் தேவையையும், பொது மக்களின் அவசர கடன் தேவையையும் நிறைவு செய்கின்றன.

## 2.1 தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி

***2.1.1.*** தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி 1905 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, மாநிலத்தில் இயங்கிவரும் 23 மத்திய கூட்டுறவு வங்கிகளின் இணையமாகச் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, சென்னை நகரத்தில் தனது 47 கிளைகள் மூலம் பொதுமக்களுக்கு வங்கியியல் மற்றும் நிதி சேவைகளை அளித்து வருகிறது. இவ்வங்கி, சொந்த நிதி, இட்டு வைப்புகள், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, தேசிய உடல் ஊனமுற்றோர் மேம்பாட்டு நிதிக் கழகம் ஆகியவற்றிடமிருந்து பெறப்படும் மறுநிதி வசதி, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் போன்ற உயர் நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடன் போன்றவற்றின் மூலம் தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதன் மூலம், மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு பல்வேறு கடன் வழங்கும் நோக்கங்களுக்காக மறு நிதியுதவி அளிப்பதுடன், கூட்டுறவு வங்கிகளின் உபரி நிதியையும் பராமரித்து, நிதி மேலாண்மை குறித்து வழிகாட்டுதலும் அளிக்கிறது. விவசாயக் கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நிலையத்தின் மூலம் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கப் பணியாளர்களுக்கு நிதி மேலாண்மை குறித்து பயிற்சியளித்து, பணியாளர்களின் செயல் திறனை மேம்படுத்தி வருகிறது.

***2.1.2.*** தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி தொடர்ந்து வலிமையான நிதி நிலையுடன், நிலைத்த நிறுவனமாகவும் செயல்பட்டு வருகிறது. 2013–14 ஆம்



நிதியாண்டில், இவ்வங்கி ரூ.32.21 கோடி நிகர இலாபத்துடனும், 2014–15 ஆம் நிதியாண்டில், ரூ.43.72 கோடி நிகர இலாபத்துடனும் (தணிக்கைக்கு முன்) செயல்பட்டு வருகிறது. 2013–14 ஆம் நிதியாண்டில், இவ்வங்கியின் காப்புகள் மற்றும் நிகர இருப்புகள், ரூ.797.66 கோடியிலிருந்து 2014–15 ஆம் நிதியாண்டில், ரூ.827.21 கோடியாக (தணிக்கைக்கு முன்) உயர்ந்துள்ளது.

### *2.1.3. வங்கியியல் சேவையில் தொழில்நுட்ப தீர்வுகள்*

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியில், மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவை (CORE Banking Solution) நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இவ்வங்கி தற்போது சென்னை நகரத்தில் ஆறு தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்களை (ATM) நிறுவி தனது வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான சேவையினை அளித்து வருகிறது. ‘‘நிகழ் நேர மொத்தத் தீர்வு’’ (Real Time Gross Settlement - RTGS) மற்றும் தேசிய மின்னணு நிதிப் பரிமாற்றம் (National Electronic Funds Transfer – NEFT) போன்ற தொழில் நுட்பங்களைச் செயல்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர்கள் இந்தியா முழுவதும் மின்னணு வங்கியியல் மூலம் நிதிப் பரிமாற்றங்கள் மேற்கொள்ள இவ்வங்கி உதவி செய்கிறது. இந்நடவடிக்கைகள் வங்கியின் சேவைகளை மேம்படுத்த பெரிதும் உதவியுள்ளது.

## 2.2. மத்திய கூட்டுறவு வங்கிகள்

***2.2.1.*** மத்திய கூட்டுறவு வங்கிகள், இணைப்புச் சங்கங்களான தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக்

கடன் சங்கங்கள், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்கள், பணியாளர் கூட்டுறவு கடன் மற்றும் சிக்கன நாணய சங்கங்கள், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் போன்றவற்றுக்குத் தேவையான வங்கியியல் மற்றும் கடனுதவியை வழங்கி வருகின்றன. மத்திய கூட்டுறவு வங்கிகள் தமது கிளைகள் மூலம் பொது மக்களுக்கு வங்கியியல் சேவையும் அளித்து வருகின்றன. 2014-15ஆம் ஆண்டில் மத்திய கூட்டுறவு வங்கிகள் இட்டுவைப்புகள் திரட்டுவதிலும், கடன் வழங்குவதிலும் நல்ல முன்னேற்றத்தைக் கண்டுள்ளன. மாநிலத்தில் செயல்பட்டு வரும் 23 மத்திய கூட்டுறவு வங்கிகளும் இந்திய ரிசர்வ் வங்கியின் உரிமம் பெற்ற வகையில் தமிழ்நாடு இரண்டாவது மாநிலமாகத் திகழ்கிறது. அனைத்து மத்திய கூட்டுறவு வங்கிகளும் நடப்பு இலாபத்தில் இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

***2.2.2.*** மத்திய கூட்டுறவு வங்கிகள், பொது மக்களிடமிருந்து பெறப்படும் வைப்புத் தொகை மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியிடமிருந்து பெறும் மறு நிதி உதவி மற்றும் கடன் ஆகியவற்றின் மூலம் நிதி ஆதாரங்களை திரட்டுகின்றன. வருவாய் வட்ட மற்றும் வட்டார தலைமை இடங்களில் அமைந்துள்ள 794 கிளைகளுடன் சேவை செய்து வருகின்றன. கடந்த நான்கு வருடங்களாக, இவ்வங்கிகள் அதனுடைய வைப்புகளையும், காப்புகள் மற்றும் நிகர இருப்புகளையும் தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளன. 31.03.2012–ல், ரூ.15,429.80 கோடியாக இருந்த வைப்புத் தொகை 31.03.2015–ல் ரூ.22,748.33 கோடியாக உயர்ந்துள்ளது. அதேபோன்று, 31.03.2012–ல் ரூ.2,559.87



கோடியாக இருந்த காப்புகள் மற்றும் நிகர இருப்புகள் 31.03.2015–ல் ரூ.3,351.33 கோடியாக உயர்ந்துள்ளது.

**_2.2.3._ மத்திய கூட்டுறவு வங்கிகளில் தொழில் நுட்பத் தீர்வுகள்**

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 23 மத்திய கூட்டுறவு வங்கிகளில் அவற்றின் வாடிக்கையாளர்களுக்கு மேலும் சிறப்பான சேவையை வழங்கும் பொருட்டு, மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவை (CORE Banking Solution) ரூ.8.80 கோடி செலவில் செயல்படுத்தப்படும் என 2012–13 இல் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. அதன்படி தற்போது வங்கியியல் துறையில் வணிக வங்கிகளுக்கு இணையாக அனைத்து மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளிலும் மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மைய வங்கியியல் சேவையின் மூலம் மத்திய கூட்டுறவு வங்கிகளின் கிளைகள் ஒன்றோடொன்று கணினி வழித் தொடர்பு கொள்ளவும், அக்கிளைகள் மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமையகத்தைத் தொடர்புகொள்ளவும், இதன்வழி பணப் பரிவர்த்தனை மின்ஆளுமை மூலம் விரைவாக மேற்கொள்ளவும் வழிவகுக்கப்பட்டுள்ளது. அது மட்டுமின்றி மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் அதன் கிளைகள் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியுடன் இதேபோன்று வங்கி வர்த்தகப் பணி மின்ஆளுமை மூலம் மேற்கொள்ள வழி வகை செய்யப்பட்டுள்ளது. நிகழ் நேர மொத்தத் தீர்வு (RTGS) மற்றும் தேசிய மின்னணு நிதிப் பரிமாற்றம் (NEFT) மூலம் விரைவான பண பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தமிழ்நாடு கூட்டுறவு வங்கிகளின் வரலாற்றில் முதன் முறையாக

வாடிக்கையாளர்களுக்கு நவீன வங்கியியல் சேவை அளித்திட எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையாகும்.

## 2.3. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்

***2.3.1.*** தமிழ்நாட்டில் உள்ள 4,490 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில், 1,401 தொடர் இலாபத்திலும், 1,750 நடப்பு இலாபத்திலும் செயல்பட்டு வருகின்றன. எஞ்சிய 1,339 சங்கங்களின் வணிகத்தை மேம்படுத்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 31.03.2013இல் ரூ.1 கோடிக்கு மேல் கடன் நிலுவையிலுள்ள சங்கங்களின் எண்ணிக்கை 4,329 ஆக இருந்து 31.03.2015இல் 4,431 ஆக உயர்ந்துள்ளது. எஞ்சிய 59 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும் ரூ.1 கோடிக்கு மேல் கடன் வழங்கிட திட்டமிடப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

***2.3.2.*** கடன் வழங்கல் சேவையினைத் தவிர தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வேளாண் இடுபொருட்களான உரங்கள், விதைகளோடு வேளாண் கருவிகளையும் அளித்து வருகின்றன. கிராமப்புற மக்களின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்யும் விதமாக வேளாண்மை சேவை மையம், வேளாண் பாதுகாப்பு மையம் மற்றும் பொதுச் சேவை மையம் போன்றவற்றின் மூலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பன்முக சேவை மையங்களாக தற்போது மாற்றப்பட்டு வருகின்றன. மேலும் கிராமப் பகுதிகளில், இன்றியமையாக் குடிமைப் பொருட்கள் கிடைக்கும் வகையில் பொது விநியோகத்



திட்டத்தின்கீழ் 23,752 நியாயவிலைக் கடைகளையும் நடத்தி வருகின்றன.

***2.3.3.*** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் 31.03.2015 வரையிலான கடன் மற்றும் வைப்புகள் விவரம் பின்வருமாறு :–

தொகை (ரூ. கோடியில்)

| விவரம் | 2013–14 | 2014–15 |
|---|---|---|
| வைப்புத் தொகை மார்ச் 31 அன்று உள்ளவாறு | 5,995.49 | 5,987.72 |
| வழங்கிய கடன்கள் | 20,989.51 | 20,326.63 |

***2.3.4.*** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை வலுப்படுத்தவும், அவற்றிற்கு புதிய உள் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தவும், அவற்றைப் புத்துயிரூட்டவும், மத்திய கூட்டுறவு வங்கிகளின் பங்களிப்பு மூலம் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியால் பராமரிக்கப்பட்டு வரும் தொடக்கக் கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து கீழ்க்கண்ட நோக்கங்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது :–

(i) நவீன வங்கி கட்டடம் கட்டுதல், பாதுகாப்புக் கதவுகளுடன் கூடிய பாதுகாப்பு அறைகள் கட்டுதல், பாதுகாப்புக் கதவுகள், கிரில் கதவுகள், பாதுகாப்புப் பெட்டகங்கள் அமைத்தல்;

(ii) பேராசிரியர் வைத்தியநாதன் குழு பரிந்துரையின் அடிப்படையில் புத்துயிரூட்டும் திட்டத்தின் கீழ் எவ்வித நிதியுதவியும் பெறாத தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன்

சங்கங்களுக்கு அளிக்கப்படும் காசுக் கடனுக்கான வட்டி மானியம்;

(iii) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு வேளாண்மை உபகரணங்கள் வாங்க வட்டி மானியம்;

(iv) கணினி மற்றும் உபகரணங்கள் வாங்க தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு வட்டி மானியம்.

***2.3.5.*** தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் பங்களிப்பு மூலம் ‘‘வைப்புத் தொகை உத்தரவாத நிதி” திரட்டப்பட்டு, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியால் இந்நிதி பராமரிக்கப்பட்டு வருகிறது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் சேகரித்த இட்டு வைப்புத் தொகைகளை அச்சங்கங்கள் வைப்புதாரர்களுக்குத் திருப்பி வழங்க இயலாத நிலை ஏற்படும்போது இந்நிதி பயன்படுத்தப்படுகிறது. 31.03.2015 அன்றுள்ளபடி இந்நிதி ரூ.118 கோடியாக உள்ளது.

***2.3.6.*** தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் தொழில்நுட்ப வழிகாட்டுதல்களின்படி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் மின்னணு வங்கியியல் சேவை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு தடையற்ற வகையில் நிதி மாற்றம் செய்யும் வசதி செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் தொலைதூரப் பகுதிகளில் உள்ள கிராமப்புற மக்களுக்குப் பயனளிப்பது மட்டுமல்லாமல், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் கடனற்ற பிற வருவாயை அதிகரித்துள்ளது.



### ***2.3.7. வட்டி இல்லா பயிர்க் கடன்***

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வழங்கும் கடன்களில் முதன்மையானது விவசாய உறுப்பினர்களுக்கு பயிர்க் கடன் வழங்குவது ஆகும். சிறு, குறு விவசாயிகள், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்களை உள்ளடக்கிய ஒட்டுமொத்த வளர்ச்சியை இலக்காகக்கொண்டு பயிர்க்கடன் வழங்கப்பட்டு வருகிறது. பயிர்க் கடனுக்கான வட்டி 7 விழுக்காடு என நிர்ணயித்துள்ளபோதிலும் **பயிர்க்கடனை உரிய காலக்கெடுவிற்குள் திரும்ப செலுத்தும் விவசாயிகளிடம் வட்டித் தொகை அறவே வசூலிக்கப்படுவதில்லை.** விவசாயிகள் செலுத்த வேண்டிய வட்டித் தொகையை அரசே ஏற்று, கூட்டுறவுச் சங்கங்களுக்கு வட்டி மானியமாக வழங்குகிறது.

2014–15 ஆம் ஆண்டில், ரூ.5,000 கோடி பயிர்க் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 10,36,859 விவசாயிகளுக்கு ரூ.5,279.91 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் 1,54,159 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.693.67 கோடி பயிர்க்கடனாக வழங்கப்பட்டுள்ளது. 2014–15 ஆம் ஆண்டில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ. 50 கோடி உட்பட மொத்தம் ரூ.200 கோடி தமிழக அரசால், வட்டியின்றி பயிர்க்கடன் வழங்குவதற்காக வட்டி மானியமாகவும் ஊக்கத் தொகையாகவும் விடுவிக்கப்பட்டுள்ளது.

2015–16ஆம் ஆண்டில் ரூ.5,500 கோடி பயிர்க்கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. உரிய காலத்தில்

பயிர்க்கடனைத் திரும்பச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டி மானியம் மற்றும் ஊக்கத் தொகையாக ரூ.200 கோடி வரவு செலவுத் திட்டத்தில் தமிழ்நாடு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *2.3.8. கூட்டுப் பொறுப்புக் குழுக்கள்*

இதுவரை எந்த நிறுவனங்கள் மூலமும் கடன் பெற இயலாத, வாரத்துக்குப் பயிர்செய்வோர், குத்தகைதாரர், சிறு மற்றும் குறு விவசாயிகள் ஆகியோரை உள்ளடக்கியது கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் ஆகும். மாநிலத்தில் தற்போது உள்ள 40,000 கூட்டுப் பொறுப்புக் குழுக்களில் 2014–15ஆம் ஆண்டில், 19,509 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு ரூ.512.36 கோடி அளவிற்குப் பயிர்க்கடன்களும், 1,625 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு ரூ.24.94 கோடி அளவிற்கு மத்திய கால முதலீட்டுக் கடன்களும் வழங்கப்பட்டுள்ளன.

### *2.3.9. தானிய ஈட்டுக்கடன்*

அறுவடைக் காலங்களில் விளைபொருட்களின் விலை மிகக் குறைவாக இருக்கின்ற நிலையில், விவசாயிகள் அவற்றை இருப்பு வைத்து, இலாபகரமான விலை கிடைக்கின்றபொழுது விற்றுப் பயனடைய வாய்ப்பளிக்கும் வகையில் தானிய ஈட்டுக் கடன் வழங்கப்படுகிறது. 2014–15 ஆம் ஆண்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக ரூ.238.15 கோடி தானிய ஈட்டுக் கடன் 14,716 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.



### *2.3.10. வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த முதலீட்டு கடன்*

விவசாய மூலதனத்தை உருவாக்கவும், நிலைத்த வேளாண் உற்பத்தியை உயர்த்தவும் முதலீட்டுக் கடன்கள் வழங்குவது ஊக்குவிக்கப்படுகிறது. 2014–15ஆம் ஆண்டில், 59,578 விவசாயிகளுக்கு ரூ. 290.85 கோடி அளவிற்கு முதலீட்டுக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 5,788 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின உறுப்பினர்கள் ரூ.25.13 கோடி கடன்கள் பெற்றுப் பயன் அடைந்துள்ளனர்.

### *2.3.11. சிறு வணிகக் கடன்*

பூ, காய்கறிகள், பழங்கள் விற்பனை மற்றும் பெட்டிக் கடை நடத்துதல் போன்ற சிறு வணிகங்கள் செய்பவர்களுக்கு ரூ.10,000 வரை பிணையம் ஏதுமின்றி சிறுவணிகக் கடன் திட்டம் மூலம் கடன் வழங்கப்படுகிறது. இதன்மூலம் 2014–15ஆம் ஆண்டில், 1,43,187 பயனாளிகள் ரூ.146.30 கோடி அளவிற்கு பயனடைந்துள்ளனர்.

### *2.3.12. சுய உதவிக் குழுக்களுக்குக் கடன்*

சுய உதவிக் குழுக்களின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்ய கூட்டுறவுக் கடன் அமைப்புகள் தொடர்ந்து உதவி செய்து வருகின்றன. இதன்மூலம் 2014–15ஆம் ஆண்டில், 29,701 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.550.08 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

### *2.3.13. மகளிர் தொழில் முனைவோர் கடன்*

மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் சிறு தொழில்கள் மற்றும் சேவை அளிப்பதை ஊக்குவிக்க ரூ.10 இலட்சம் வரை மகளிருக்கு

தொழில் முனைவோர் கடன்கள் வழங்கப்படுகின்றன. 2014–15 ஆம் ஆண்டில், 12,329 மகளிருக்கு தொழில் முனைவோர் கடனாக ரூ.47.42 கோடி வழங்கப்பட்டுள்ளது.

***2.3.14. பணிபுரியும் மகளிருக்கான கடன்***

மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள், மாத வருவாய் பெறும் பணிபுரியும் மகளிருக்கு 36 மாதத் தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் ரூ.1,00,000 வரை கடன் வழங்குகின்றன. 2014–15ஆம் ஆண்டில், 9,600 பணிபுரியும் மகளிருக்கு ரூ. 43.82 கோடி வழங்கப்பட்டுள்ளது.

***2.3.15. மாற்று திறனாளிகளுக்கான கடன்***

மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத் தரம் முன்னேற்றப் பாதையில் செல்லும் பொருட்டு பல்வேறு பொருளாதார மற்றும் வருவாய் ஈட்டும் தொழில்களை அவர்கள் மேற்கொள்ள, கூட்டுறவு வங்கிகள் கடன் வழங்குவதோடு உரிய காலத்தில் கடனை திரும்பச் செலுத்தும்போது வட்டி வசூலிப்பதில்லை. 2014–15ஆம் ஆண்டில், 7,195 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.26.10 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய கடன் வழங்க 2014–15ஆம் ஆண்டில், ரூ.1 கோடி, தமிழ்நாடு அரசால் வட்டி மானியமாக அனுமதிக்கப்பட்டுள்ளது. **2013–14 ஆம் ஆண்டில், மாற்றுத்திறனாளிகளின் பொருளாதார மேம்பாட்டிற்கான கடன்கள் வழங்குவதில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, சிறந்த முகமை நிறுவனமாகச் செயல்பட்டமைக்கு மேதகு குடியரசு தலைவரின் தேசிய விருதினைப் பெற்றுள்ளது.**

***2.3.16.*** மகளிர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஆதிதிராவிடர்/ பழங்குடியின உறுப்பினர்களின் கடன்



பெறும் திறனை உயர்த்தி அவர்தம் பொருளாதாரம் மேம்பாடு அடைய, அரசால் பங்கு மூலதன நிதி உதவி மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. 2014–15 ஆம் ஆண்டில், நகர கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினராக உள்ள 1,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களில் உறுப்பினராக உள்ள 1,000 மகளிர் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களிலும் நகர கூட்டுறவு வங்கிகளிலும் உறுப்பினராக உள்ள 1,000 மாற்று திறனாளிகள் உள்ளிட்ட 3,000 நபர்களுக்கு தலா ரூ. 2,500 வீதம் மொத்தம் ரூ.75 இலட்சம் பங்கு மூலதன உதவி வழங்கப்பட்டுள்ளது.

***2.3.17. பேராசிரியர் அ. வைத்தியநாதன் அவர்கள் தலைமையிலான*** சிறப்புப் பணிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்புகள் திறம்பட செயல்படவும், அவற்றை நன்முறையில் நிர்வாகம் செய்யவும், மக்களின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற சீரிய அமைப்பாக மாற்றிடவும் மறுசீரமைப்புச் செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 31.03.2004 அன்றைய தேதியில் உள்ள நட்டத்தின் அடிப்படையில் மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு மறு முதலீட்டு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இந்திய அரசின் பங்காக ரூ.1,078.84 கோடியும், தமிழ்நாடு அரசின் பங்காக ரூ.385.45 கோடியும் அளிக்கப்பட்டுள்ளன.

***2.3.18*** குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் நிறுவனங்களின் கடன் வசூல் உட்பட அனைத்துச் செயல்பாடுகளிலும் முன்னேற்றம் எய்திட, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின்

சட்டம், 1983, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள், 1988 மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் துணை விதிகள் ஆகியவற்றில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் உதவியுடன் பணியாளர்களின் திறமையை மேம்படுத்தியதின் மூலம், நிறுவனங்களின் வணிக நடவடிக்கைகள் மற்றும் நிர்வாகம் திறமையாகச் செயல்பட வழிவகுக்கப்பட்டுள்ளது. இச்சங்கங்களின் நடைமுறை மற்றும் அதன் மீதான கண்காணிப்புப் பணியினை மேம்படுத்த பொது கணக்கு மற்றும் மேலாண்மைத் தகவல் முறை ஆகியவை செயல்படுத்தப்பட்டுள்ளது.

***2.3.19.*** கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.69.50 கோடி சிறப்புக் காசுக் கடனாக 139 தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு தலா ரூ. 50 லட்சம் வீதம் வழங்கப்பட்டது. இந்நிதி உதவி 2013–14 ஆம் ஆண்டில், 72 சங்கங்களுக்கும், 2014–15ஆம் ஆண்டில், 67 சங்கங்களுக்கும் வழங்கப்பட்டது.

***2.3.20. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் பன்முக செயல்பாடுகள்***

தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள், அதன் உறுப்பினர்களின் நன்மைக்காகவும், கிராமப்புற மக்களுக்கு பல்வேறு சேவைகளை அளிப்பதற்காகவும், கீழ்கண்ட செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன:–

**( i) வேளாண் இடுபொருட்கள் விநியோகம்**

உறுப்பினர்களின் நன்மைக்காக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் உரம், விதைகள் மற்றும் வேளாண் இடுபொருட்களை விற்பனை



செய்கின்றன. 2014–15ஆம் ஆண்டில், ரூ.665.80 கோடி மதிப்புள்ள உரங்களும் ரூ. 14.28 கோடி அளவிற்கு விதைகளும் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

**(ii) பொதுச் சேவை மையங்கள்**

பல்வேறு அரசு அலுவலகங்களுக்கு பல்வேறு சேவைகள் பெற, பொதுமக்கள் பலமுறை செல்வதற்கு பதிலாக ஒரே இடத்தில் அவற்றை பெறும் வகையில், 4,239 பொதுச் சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல், நிலவுடைமைப் பதிவிறக்கம், மின்னணுப் பயணச் சீட்டு, வருவாய் துறையினரால் வழங்கப்படும் சான்றிதழ்கள், சமூக நலத்துறையினரால் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளை பெற விண்ணப்பித்தல், ஒளிப்பட நகல், புகைப்படம் எடுத்தல் போன்ற மின்னணு சேவைகள் அளிக்கப்படுகின்றன. பொதுச்சேவை மையங்கள் மூலம், இச்சங்கங்கள் 2014–15ஆம் ஆண்டில், 25,25,457 சேவைகள் வழங்கி ரூ.5.73 கோடி வருவாய் ஈட்டியுள்ளன. நடப்பாண்டில் 20,37,002 சேவைகள் வழங்கி கூட்டுறவு சங்கங்கள் ரூ.7.63 கோடி வருவாய் ஈட்டியுள்ளது, இம்மையங்கள் மக்களிடையே பெற்றுள்ள வரவேற்புக்கு எடுத்துக்காட்டாகும்.

**(iii) வேளாண் பாதுகாப்பு மையம்**

வேளாண் பாதுகாப்பு மையங்கள், மண் மற்றும் பாசன நீர் பரிசோதனை செய்வதுடன் விவசாயிகள் பின்பற்ற வேண்டிய பண்ணைச் சாகுபடி முறைகளை வழங்குகின்றன. தொடக்கக் கூட்டுறவு வளர்ச்சி நிதி மற்றும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்ட நிதி உதவி மூலம் தலா ரூ.6 இலட்சம் மதிப்பில் 190 வேளாண் பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### (iv) வேளாண் சேவை மையங்கள்

வேளாண்மையில் உற்பத்தியைப் பெருக்குவதுடன், சாகுபடி காலங்களில் ஏற்படும் வேலையாட்கள் பற்றாக்குறையைச் சமாளிக்கவும், சாகுபடி செலவுகளைக் குறைக்கவும் விவசாயப் பணிகளில் இயந்திரங்களின் பயன்பாடு இன்றியமையாததாகிறது. வேளாண் இயந்திரமயமாக்குதலின் பயன்களை சிறு மற்றும் குறு விவசாயிகள் பெற உதவும் வகையில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் தற்போது 2,104 வேளாண் சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை நியாயமான வாடகையில் விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்களையும், கருவிகளையும் வழங்கி வருகின்றன. ஒரு சங்கத்திற்கு 50 விழுக்காடு மானியம், அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் வரை வேளாண் சேவை மையம் அமைக்க அரசால் வழங்கப்பட்டுள்ளது. 2014–15 ஆம் ஆண்டில், வேளாண் சேவை மையங்கள் ரூ.3.95 கோடி வருவாய் ஈட்டியுள்ளன.

### (v) நுண் காப்பீடு

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் காப்பீட்டு நிறுவனங்களுடன் இணைந்து ஆயுள் மற்றும் பொது காப்பீட்டுத் திட்டங்களின் கீழ் காப்பீட்டுத் தொகை வசூலிக்கவும், இழப்பீட்டு கோரிக்கைகளைத் தீர்வு செய்யவும் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதனால், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் நல்லமுறையில் சேவை புரியவும், ஊக்கத்தொகை ஈட்டவும் வழிவகுக்கப்பட்டுள்ளது. 2014–15ஆம் ஆண்டில், நுண்காப்பீட்டு திட்டத்தில் சேர்ந்துள்ள 95,752 கிராம மக்களிடம் ரூ.94.68 இலட்சம் காப்பீட்டு பிரிமீயத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.



### (vi) வாழைத்தார் குளிரூட்டி கனிய வைக்கும் நிலையம்

வாழை விவசாயிகள் தாங்கள் விளைவிக்கும் வாழைத்தார்களுக்கு ஆதாய விலை பெறும் பொருட்டு, **கூட்டுறவு வரலாற்றில் முதன் முறையாக** வாழைத்தார் குளிரூட்டிக் கனிய வைக்கும் நிலையம் அமைக்கப்படும் என சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. அதன்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், வரதராஜபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் ரூ.28 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 20.06.2013 அன்று விவசாயிகள் பயன்பாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. மேலும், மகாதானபுரம் (கரூர்), காரவிளை (கன்னியாகுமரி) மற்றும் உய்யக்கொண்டான் திருமலை (திருச்சிராப்பள்ளி) ஆகிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களிலும், கோபிச்செட்டிப்பாளையம் (ஈரோடு) மற்றும் அம்பாசமுத்திரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் (திருநெல்வேலி) ஆகிய 5 சங்கங்களிலும் வாழைத்தார் குளிரூட்டி கனியவைக்கும் நிலையம் அமைக்க ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகிறது.

## 2.4 கூட்டுறவு வங்கிகள் மற்றும் சங்கங்களை நவீனமயமாக்கல்

***2.4.1.*** பிற வணிக வங்கிகளுக்கு இணையாக வாடிக்கையாளர்களுக்குச் சேவைபுரியும் வகையில் மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகளின் 100 கிளைகள் நவீனமயமாக்கப்படும் என 2012–13 ஆம் ஆண்டிற்கான கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையின் போது தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. அதன்படி, மத்திய கூட்டுறவு

வங்கிகளின் 78 கிளைகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகளின் 22 கிளைகள் ஆக மொத்தம் 100 கிளைகள் ரூ. 11.75 கோடி செலவில் நவீனமயமாக்கப்பட்டுள்ளன.

***2.4.2.*** 2013–14 ஆம் ஆண்டில், மத்திய கூட்டுறவு வங்கிகளின் 75 கிளைகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகளின் 25 கிளைகள் தலா ரூ.15 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் நவீனமயமாக்க திட்டமிடப்பட்டது. அதன்படி, மத்திய கூட்டுறவு வங்கிகளின் 52 கிளைகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகளின் 24 கிளைகளில் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. எஞ்சியுள்ள 24 கிளைகளில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

***2.4.3.*** 2014–15ஆம் ஆண்டில், 100 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் நவீனமயமாக்கப்படும் என திட்டமிடப்பட்டு, அச்சங்கங்களின் நவீனமயமாக்கல் பணி நிறைவு பெற்றுவிட்டது. 2014–15ஆம் ஆண்டில், மத்திய கூட்டுறவு வங்கிகளின் 71 கிளைகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகளின் 18 கிளைகளை ரூ.10.13 கோடி திட்ட மதிப்பீட்டிலும் 15 நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை ரூ.1.50 கோடி மதிப்பீட்டிலும் நவீனமயமாக்க திட்டமிடப்பட்டது. அதன்படி நவீனமயமாக்கல் 92 கூட்டுறவு நிறுவனங்களில் முடிவடைந்து, எஞ்சிய 12 கூட்டுறவு நிறுவனங்களில் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

## 2.5. கணினிமயமாக்கல்

அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் அதன் கிளைகளில் பல்வேறு வகையிலான சேவைகளை செம்மைப்படுத்தி அளித்திடும் நோக்கத்துடன், கணினிமயமாக்கல் பணி



மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2012–13 ஆம் ஆண்டிற்கான கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையின்போது, தமிழ்நாடு சட்டமன்றத்தில் 1,121 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு தலா ரூ.25,000 வீதம் கணினிகள் வாங்குவதற்கு நிதி உதவி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, அச்சங்கங்களுக்கு ரூ.2.80 கோடி செலவில் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

## 2.6. புதிய கூட்டுறவு வங்கிக் கிளைகள் துவக்குதல் மற்றும் சொந்தக் கட்டடம் கட்டுதல்

***2.6.1.*** வணிக வங்கிகளுக்கு இணையாக, கூட்டுறவு வங்கிகளின் சேவையை, வாடிக்கையாளர்களுக்கு வழங்க வேண்டும் என்ற நோக்கில், மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாக 25 புதிய கிளைகள் ரூ.5 கோடி மதிப்பீட்டில் துவக்கப்படுமெனவும், ஏற்கெனவே வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டுவரும் 25 மத்திய கூட்டுறவு வங்கி கிளைகளுக்கு ரூ.6.25 கோடி மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் எனவும், 2012–13ஆம் ஆண்டில் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. அதன்படி, மத்திய கூட்டுறவு வங்கிகளில் 25 புதிய கிளைகள் துவக்கப்பட்டு பொதுமக்களுக்கு நவீன வங்கியியல் சேவைகளை வழங்கி வருகின்றன. வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்த மத்திய கூட்டுறவு வங்கிகளின் 20 கிளைகளுக்குப் புதிய கட்டடங்கள் ரூ.7.21 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு, வாடிக்கையாளர்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 5 கிளைகளில் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

***2.6.2.*** மேலும், 21 புதிய கிளைகள் – மத்திய கூட்டுறவு வங்கிகளின் 19 புதிய கிளைகள் மற்றும் நகர கூட்டுறவு

வங்கிகளின் 2 புதிய கிளைகள் 2014–15 ஆம் ஆண்டில் துவக்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் ஏற்கனவே 7 கிளைகள் துவக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள கிளைகள் விரைவில் துவக்கப்பட உள்ளன.



## 3. நீண்ட கால கூட்டுறவுக் கடன் அமைப்பு

நீண்ட கால கூட்டுறவுக் கடன் அமைப்பு, மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியையும், வட்ட / வட்டார அளவில் உள்ள 180 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளையும் உள்ளடக்கியதாகும். இவை விவசாயம் சார்ந்த மற்றும் விவசாயம் சாராத நோக்கங்களுக்கு நீண்டகாலக் கடன் வழங்கும் அமைப்பாகும்.

### 3.1. தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி

***3.1.1.*** தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் திருத்தப்பட்ட கொள்கை வழிகாட்டுதல்களின்படி, தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மறு நிதியுதவி பெற இயலவில்லை. இதன் விளைவாக, தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், அவற்றின் வாலாயமான கடன் வழங்கும் பணிகளை மேற்கொள்ள இயலவில்லை. இந்தச் சூழ்நிலையைத் தவிர்க்கும் விதத்தில், தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, கடன்கள் வழங்க தனது சொந்த நிதியிலிருந்து தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு நிதி உதவி அளிக்க ஆரம்பித்தது.

***3.1.2.*** 31.03.2015 அன்று, ரூ.139.63 கோடி வைப்புகளைத் திரட்டி இவ்வங்கி, 2014–15ஆம் ஆண்டில், ரூ.264.04 கோடி நகைக்கடன் வழங்கியுள்ளது.

## 3.2. தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்

மாநிலத்தில் 180 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வங்கிகள் 2014–15ஆம் ஆண்டில், ரூ.952.03 கோடி நகைக்கடன் வழங்கியுள்ளன. இவ்வங்கிகளின் செயல்பாட்டினை விரிவாக்கும் பொருட்டு, 100 பொதுச் சேவை மையங்கள் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

## 3.3. ஒருமுறை கடன் தீர்வு திட்டம்

தமிழ்நாடு அரசு, தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் உறுப்பினர்கள் தவணை தவறிய பண்ணை சாராக் கடனைத் திரும்ப செலுத்தும் வகையிலும், தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மற்றும் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் நிதி ஆதாரத்தை வலுப்படுத்தும் வகையிலும், ஒரு முறை கடன் தீர்வு திட்டத்தினை அனுமதித்துள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்துவதால் 5,741 கடன்தாரர்களிடமிருந்து, 31.3.2014 அன்றுள்ளபடி, அசல் மற்றும் வட்டியாக ரூ.132.88 கோடி வசூலிக்கப்படும். இந்தக் கடன்தாரர்களின் அபராத வட்டி, கூடுதல் வட்டி மற்றும் இதர இனங்கள் தள்ளுபடி செய்வதால், ரூ.166.92 கோடி அளவிற்கு பயன்பெறுவர்.



## 4. நகரக் கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள்

நகரக் கூட்டுறவுக் கடன் அமைப்பு, நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை உள்ளடக்கியது ஆகும். இவை, நகர மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள நடுத்தர மக்களின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு வங்கிச் சேவைகளையும் அளித்து வருகின்றன.

தமிழ்நாட்டில் 73 நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இச்சங்கங்கள் 2014–15ஆம் ஆண்டில், 2,95,462 உறுப்பினர்களுக்கு நகைக்கடன், வீட்டு அடமானக்கடன் மற்றும் வீட்டு வசதிக் கடன்கள் என ரூ. 1,270.51 கோடி வழங்கியுள்ளன.

### 4.1. தமிழ்நாடு நகரக் கூட்டுறவு வங்கிகளின் இணையம்

தமிழ்நாட்டில் நகரக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழிகாட்டியாக, தமிழ்நாடு நகரக் கூட்டுறவு வங்கிகளின் இணையம் செயல்பட்டு வருகிறது.

### 4.2 நகரக் கூட்டுறவு வங்கிகள்

***4.2.1.*** தமிழ்நாட்டில் 120 நகரக் கூட்டுறவு வங்கிகள் செயல்படுகின்றன. நகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு, நகரக் கூட்டுறவு வங்கிகள் வங்கிச் சேவை மற்றும் கடன் வசதிகளை அளித்து வருகின்றன. அவை பொதுமக்களிடமிருந்து வைப்பு நிதி பெற்று சிறு வணிகர்களுக்கும், கைவினைஞர்களுக்கும், நடுத்தர வருவாய்க் குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கும் வீடுகட்டுதல், வணிகம், கல்வி, நுகர்வோர் கடன் மற்றும் வேளாண் சாராக் கடன்கள் போன்ற கடன்களை அளிக்கின்றன. 2014–15ஆம் ஆண்டில், நகரக் கூட்டுறவு

வங்கிகள் 14,12,225 பயனாளிகளுக்கு ரூ.5,975.39 கோடி கடன்கள் வழங்கியுள்ளன.

***4.2.2.*** நகரக் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகளை மேம்படுத்த மாநில அரசு, இந்திய ரிசர்வ் வங்கியுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. அதன்படி, அனைத்து நகரக் கூட்டுறவு வங்கிகளையும், அவற்றின் கிளைகளையும் கணினிமயமாக்கும் பணி முடிந்துள்ளது. வணிக வங்கிகளுக்கு இணையாக வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவை அளிக்க ஏதுவாக மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவை **(CBS)** நகரக் கூட்டுறவு வங்கிகளில் செயல்படுத்தப்பட உள்ளது.

## 5. பணியாளர் கூட்டுறவு கடன் மற்றும் சிக்கன நாணய சங்கம்

மத்திய, மாநில அரசுப் பணியாளர்கள், அரசு சார்ந்த மற்றும் தனியார் நிறுவனங்களின் பணியாளர்களின் நன்மைக்காக மாநிலத்தில் 1,758 பணியாளர் கூட்டுறவு கடன் மற்றும் சிக்கன நாணய சங்கங்கள் ரூ.1,635.08 கோடி பங்குத் தொகையுடனும், ரூ.10,223.78 கோடி நடைமுறை மூலதனத்துடனும் செயலாற்றி வருகின்றன. இச்சங்கங்கள் உறுப்பினர்களுக்கு, 2014–15 ஆம் ஆண்டில், ரூ.6,307.31 கோடி கடன் வழங்கியுள்ளன.



## 6. கூட்டுறவு வங்கிகளில் பாதுகாப்பு வசதிகள்

**6.1.** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் வழங்கும் நகைக் கடன்களுக்கு ஈடாகப் பெறப்படும் நகைகளைப் பாதுகாக்கவும், தினசரி கையிருப்புத் தொகையினை பாதுகாக்கும் பொருட்டும், பொதுமக்கள் மத்தியில் சங்கங்களின் மீதான நம்பிக்கையை அதிகரிக்கவும், திருட்டு/கொள்ளை முயற்சிகளைத் தடுக்கவும் அவைகளின் அடிப்படைப் பாதுகாப்புக் கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. தற்போது செயல்பட்டுவரும் 4,490 சங்கங்களில், 3,975 சங்கங்கள் பாதுகாப்பு அறையுடன் செயல்பட்டு வருகின்றன.

**6.2.** 2012–13 ஆம் ஆண்டில், 50 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் 16 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் பாதுகாப்பு வசதிகளை வலுப்படுத்தும் பொருட்டு கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.3.09 கோடி வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டு பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறைகள் கட்டப்பட்டன. மேலும், 52 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.69.16 இலட்சம் வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டு, இரும்புப் பெட்டகங்கள் நிறுவப்பட்டுள்ளது.

**6.3.** 2013–14ஆம் ஆண்டில், 50 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் ரூ.2.32 கோடி செலவில் பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறைகள் கட்டப்பட்டுள்ளன.

**6.4.** 2014–15 ஆம் ஆண்டில், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ. 27.06 கோடி வட்டியில்லாக் கடன் அளித்து, 540 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் உட்பட 556 சங்கங்களுக்குப் பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பறைகள் கட்டப்பட்டு, 60 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் நகைப் பெட்டகங்கள் நிறுவப்பட்டன.

**6.5.** இதுமட்டுமின்றி, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மத்திய கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் அதன் கிளைகள் 1,038–லும் உட்சுற்று தொலைக்காட்சிக் கண்காணிப்பு நிழற்படக் கருவிகள் (CCTV) நிறுவப்பட்டுள்ளன.

**6.6.** 2014–15 ஆம் ஆண்டில், 850 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், தமிழ்நாடு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் 7 கிளைகள் மற்றும் 18 மண்டல அலுவலகங்கள், 71 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், 5 நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 3 நகரக் கூட்டுறவு வங்கிகள் ஆக மொத்தம் 954 கூட்டுறவு நிறுவனங்களில் உட்சுற்று தொலைக்காட்சி கண்காணிப்பு நிழற்படக் கருவிகள் (CCTV) நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்பணியினை முடித்திட துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



## 7. துயர் துடைப்புப் பணிகள்

### 7.1. வறட்சி நிவாரணம்

மாநிலத்தில் 2012–13ஆம் ஆண்டில், 31 மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது. காவேரி டெல்டா பாசன பகுதிகளில் 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டதற்கு, பயிர்க் காப்பீட்டு நிவாரணத்துடன் சிறப்புக் கூடுதல் நிவாரணமாக மொத்தம் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15,000/– வீதம் வழங்க அரசால் ஆணையிடப்பட்டது. அரசிடமிருந்து ரூ.541.36 கோடி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பெறப்பட்டு, ரூ.517.98 கோடி, 3,48,681 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. காவேரி டெல்டா பாசனப் பகுதி அல்லாத இதர பகுதிகளில், பயிர் வகைகளுக்கேற்ப ஏக்கருக்கு ரூ.3,000, ரூ.4,000 மற்றும் ரூ.5,000 என்ற வகையில் நிவாரணத் தொகை அரசால் அறிவிக்கப்பட்டு, அரசிடமிருந்து ரூ.835.21 கோடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பெறப்பட்டு, ரூ.766.60 கோடி 15,96,887 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 7.2. பயிர்க் காப்பீடு

2012–13 நெல்–II பருவத்திற்கு, இந்திய வேளாண் காப்பீடு நிறுவனம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு பயிர்க் காப்பீடுத் திட்டத்தின்கீழ், பயிர்க் காப்பீடு இழப்பீட்டுத் தொகையாக ரூ.633.56 கோடி விடுவித்தது. 31.03.2015 முடிய 5,10,827 விவசாயிகளுக்கு ரூ.609.84 கோடி வழங்கப்பட்டுள்ளது. ஜனவரி 2015இல்,

ரூ.132.97 கோடி இதர பயிர்களுக்கு வரப்பெற்று ரூ.126.45 கோடி, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மார்ச் 2015இல், நெல்–II 2013 பருவத்திற்கு, ரூ.28.71 கோடி பெறப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 8. பணியாளர் நலன்

### 8.1. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கான ஊதிய உயர்வு

தமிழ்நாடு அரசு, பணியாளர்களின் நலனுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கி வருகிறது. மேற்கண்ட வகையில் 120 நகரக் கூட்டுறவு வங்கிகளின் 1,701 பணியாளர்களுக்கும், தமிழ்நாடு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் 152 பணியாளர்களுக்கும் 01.01.2012 முதல் அதிகபட்சமாக 20 சதவிகிதம் ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இதனால் ஆண்டொன்றுக்கு ரூ.13.33 கோடி மற்றும் ரூ.1.55 கோடி அளவிற்கு முறையே கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது. அதேபோல், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பணியாற்றும் 15,778 பணியாளர்களுக்கு 01.04.2013 முதல் அதிகபட்சமாக 12 சதவிகிதம் ஊதிய உயர்வு வழங்கப்பட்டு ஆண்டொன்றுக்கு ரூ.26.89 கோடி அளவிற்கு கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது



### 8.2. கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

அரசுப் பணியாளர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2012, கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், இரண்டாண்டுகளில், கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களும் அவர்களைச் சார்ந்த குடும்பத்தினரும் ரூ.2 இலட்சம் வரை பணம் செலுத்தாமல் மருத்துவச் சிகிச்சை பெறலாம். இத்திட்டத்திற்கான ஓராண்டு காப்பீட்டுக் கட்டணத் தொகையான (Premium) ரூ.2,120/–ஐ பணியாளர்களும், சங்கமும் சரிபாதியாக பகிர்ந்து கொள்ளும். இத்திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 27.7.2015 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், 6,245 சங்கங்களைச் சார்ந்த சுமார் 41,000–ற்கும் மேற்பட்ட பணியாளர்களும் மற்றும் அவர்களைச் சார்ந்த சுமார் 1.15 இலட்சம் குடும்ப உறுப்பினர்களும் பயன் பெறுவார்கள்.

## 9. தேசிய விருதுகள்

கூட்டுறவு நிறுவனங்களின் செயல்பாடுகள் அகில இந்திய அளவில் வெகுவாக பாராட்டப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு கூட்டுறவு அமைப்புகள் பெற்றுள்ள அகில இந்திய விருதுகள் இம்மாநிலத்தில் கூட்டுறவு இயக்கம் வெற்றிகரமாக செயல்படுவதை பறைசாற்றுகின்றது. கூட்டுறவு அமைப்புகள் பெற்றுள்ள தேசிய விருதுகள் பின்வருமாறு :–

**9.1** தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி 2011–12ஆம் ஆண்டில் கூட்டுறவு வேளாண் கடன் அமைப்புகளுக்கான **“சிறந்த கூட்டுறவு நிறுவனம்”**

என்ற விருதினை இந்திய தேசிய கூட்டுறவு ஒன்றியத்திடமிருந்து பெற்றுள்ளது.

**9.2** தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி 2011–12–ஆம் ஆண்டில் **அகில இந்திய வரைவோலை பரிமாற்றத் திட்டத்திற்காக "முதல் பரிசினையும்" ஒட்டுமொத்த செயல்பாடுகளுக்காக "இரண்டாம் பரிசினையும்"** மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்திடமிருந்து பெற்றுள்ளது.

**9.3** தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி 2012–13ஆம் ஆண்டில் சிறப்பாக செயல்பட்டு **ஒட்டுமொத்த செயல்பாடுகளுக்காக "முதல் பரிசினை"** மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்திடமிருந்து பெற்றுள்ளது.

**9.4** தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி 2013–14ஆம் ஆண்டில் மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகாரமளித்தமைக்கு, தேசிய உடல் ஊனமுற்றோர் மேம்பாட்டு நிதிக் கழகத்தால் **சிறந்த மாநில முகமை அமைப்பு"** என்னும் விருதினை பெற்றுள்ளது.

**9.5** தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் வேளாண் கூட்டுறவு பணியாளர்கள் பயிற்சி நிலையம், 2012–13ஆம் ஆண்டில் **சிறந்த செயல்பாடுகளுக்காக "இரண்டாம் பரிசினை"** தேசிய கூட்டுறவு பயிற்சி குழுவிடமிருந்தும் **சிறந்த செயல்பாடுகளுக்காக "மூன்றாம் பரிசினை"** மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்திடமிருந்தும் பெற்றுள்ளது.

**9.6** வேளாண் கூட்டுறவு பணியாளர்கள் பயிற்சி நிலையம் 2013–14 ஆம் ஆண்டில் **ஒட்டுமொத்த செயல்பாட்டிற்காக முதல் பரிசினை** மாநில



கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்திடமிருந்து பெற்றுள்ளது.

**9.7** திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி 2011–12–ஆம் ஆண்டில் **ஒட்டுமொத்த செயல்பாடுகளுக்காக** நாட்டிலுள்ள 372 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் **"முதல் பரிசினை"** மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்திடமிருந்து பெற்றுள்ளது.

**9.8** தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி 2013–14 ஆம் ஆண்டில் தேசிய அளவில் **மிகுதியாக வைப்புகளை சேகரித்தமைக்கு "சுழற்கேடயத்தை"** தேசிய கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் இணையத்திடமிருந்து பெற்றுள்ளது.

**9.9** தர்மபுரி மாவட்டம், பி.துரிஞ்சிப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் 2011–12 ஆம் ஆண்டில் **ஒட்டுமொத்த செயல்பாட்டிற்காக "இரண்டாம் பரிசினை"** மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்திடமிருந்து பெற்றுள்ளது.

**9.10** சேலம் மாவட்டம், மகாலட்சுமி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம், கெங்கவல்லி 2012–13 ஆம் ஆண்டில், நாட்டிலுள்ள சுமார் 93,000 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் **ஒட்டுமொத்த செயல்பாட்டிற்காக "மூன்றாம் பரிசினை"** மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்திடமிருந்து பெற்றுள்ளது.

இயல் – II

## கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

### 1. முன்னுரை

கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் உறுப்பினர்கள் விளைவிக்கும் வேளாண் விளைபொருட்களை நியாயமான விலைக்கு சந்தைப்படுத்திட ஏற்பாடு செய்தல், விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்களை விநியோகித்தல், விளைபொருட்களின் மீது தானிய ஈட்டுக்கடன் வழங்குதல், வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்தும் பணியினை மேற்கொள்ளுதல் ஆகியவை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் முக்கிய நோக்கங்கள் ஆகும். தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் 112 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மூலம் மேற்படி நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையமானது, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் தலைமை நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்ட விவசாயிகளின் தேவையை நிறைவேற்றி வருகிறது. நீலகிரி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், நீலகிரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்திட செயல்பட்டு வருகிறது.



### 2. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (TANFED)

**2.1.** தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், 20.02.1959 அன்று தனது வியாபார நடவடிக்கையைத் தொடங்கியது. இவ்விணையம் தற்போது வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக உர விற்பனை மற்றும் இதர இடுபொருட்களை விற்பனை செய்திடும் பணியில் ஈடுபட்டு வருகிறது. 2014–15ஆம் ஆண்டில், ரூ.594.47 கோடி மதிப்பிலான 4,87,166 மெட்ரிக் டன் உரங்கள், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தால் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. திருவாரூர் மாவட்டத்தில் உள்ள பாமணி என்ற இடத்தில் உரக்கலவை ஆலை ஒன்று இந்நிறுவனத்தால் நிறுவப்பட்டு, பாமணி 17:17:17 என்ற உரக்கலவையினை சொந்தமாக உற்பத்தி செய்து வருகிறது. இவ்வாலையிலிருந்து 2014–15ஆம் ஆண்டில், ரூ.21.86 கோடி மதிப்பிலான 11,920 மெட்ரிக் டன் உரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் மூலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

**2.2.** 2014–15ஆம் ஆண்டில், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் இரசாயன உரங்களை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விநியோகிக்க, ரூ.150 கோடி வட்டியில்லா வழிவகை முன்பணமாக தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது.

**2.3.** தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு சொந்தமாக 28,640 மெட்ரிக் டன் கொள்ளவு கொண்ட 38 கிடங்குகள் உள்ளன. மேலும், கோயம்பேடு மொத்த

விற்பனை சந்தை வளாகத்தில் **2,500** மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட ஒரு குளிர்ப்பதனக் கிடங்கும், பேசின்பிரிட்ஜ்–இல் **960** மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மற்றொரு குளிர்ப்பதனக் கிடங்கும் என இரு குளிர்பதனக் கிடங்குகள் உள்ளன. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுடன் இணைந்து, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், விவசாயிகளின் வேளாண் விளைபொருட்களை சந்தைப்படுத்திட, வணிக ரீதியிலான ஆதரவை அளித்து வருகிறது. தமிழ்நாட்டில், ஆதார விலைத் திட்டத்தினை செயல்படுத்திட, தேசிய வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை இணையத்தின் (NAFED) முகமையாக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையமானது தனது வியாபார நடவடிக்கைகளை படிப்படியாக விரிவுபடுத்தி, தற்போது பால் உற்பத்தியாளர்களுக்கு விநியோகிப்பதற்காக ஆவின் நிறுவனத்திற்கு மாட்டுத்தீவனத்தையும் விற்பனை செய்து வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தால் **2014–15**ஆம் ஆண்டில், ரூ.**37.36** கோடி மதிப்புள்ள **22,439** மெட்ரிக் டன் மாட்டுத்தீவனம், ஆவின் நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்திய எண்ணெய் கழகத்துடன் இணைந்து கோயம்பேடு வணிக வளாகத்தில் ஒரு பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையமும் கோடம்பாக்கத்தில் ஒரு பெட்ரோல் விற்பனை நிலையமும் நிறுவப்பட்டுள்ளது.



**2.4.** கூட்டுறவு விற்பனை இணையத்தின் செயல்பாட்டின் விவரம் பின்வருமாறு:-

(ரூ. கோடியில்)

| விவரம் | 2013–14 | 2014–15 |
|---|---|---|
| இரசாயன உரங்களின் விற்பனை | 485.22 | 594.47 |
| பூச்சிக் கொல்லி மருந்துகள் விற்பனை | 2.04 | 2.59 |
| வேளாண் விளைபொருட்கள் விற்பனை | 45.70 | 148.72 |
| பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை | 10.95 | 22.41 |

## 3. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் (TCMF)

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய மண்டல இணையமாகும். இவ்விணையம், **29.01.1941–**இல் ஆரம்பிக்கப்பட்டு, **977** உறுப்பினர்களுடன் ரூ.**76.98** இலட்சம் பங்கு மூலதனத்துடன் செயல்பட்டு வருகிறது. இவ்விணையம் உரங்கள், விதைகள் மற்றும் வேளாண் கருவிகள் விற்பனை ஆகிய வியாபார நடவடிக்கைகளை செய்து வருகிறது. இவ்விணையம், உறுப்பினர்களுக்கு நகைக்கடன்களையும் வழங்கி வருகிறது, அச்சகம் ஒன்றையும் நடத்தி வருகிறது. **31.3.2015–**ல் தஞ்சாவூர்

கூட்டுறவு விற்பனை இணையத்தின் மொத்த வணிகம் ரூ.130.29 கோடியாகும்.

## 4. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

**4.1.** மாநிலத்தில் உள்ள 112 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், வேளாண் விளைபொருள் விற்பனை, உரம் மற்றும் இதர வேளாண் இடுபொருட்கள் விற்பனையை முதன்மை நோக்கங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. பெரும்பான்மையான சங்கங்கள் பொதுவிநியோகத்திட்டத்தின் கீழான நியாய விலைக் கடைகளை நடத்துபவையாகவும், பொது விநியோகத் திட்டத்தின் கீழான இன்றியமையாக் குடிமைப் பொருட்களின் நகர்வுப் பணியை மேற்கொள்ளும் முதன்மைச் சங்கங்களாகவும் செயல்பட்டு வருகின்றன.

### 4.2 சில வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்களின் செயல்பாடுகள்

***4.2.1.*** **திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், 30.04.1930** முதல் செயல்பட்டு வருகின்றது. சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள் முழுவதும் இதன் விவகார எல்லையாக உள்ளது. இச்சங்கம், உறுப்பினர்களின் வேளாண் விளைபொருட்களை நியாயமான விலைக்கு விற்பனை செய்வதை முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது. மேலும், இச்சங்கம் வேளாண் விளைபொருட்கள் மற்றும் நகைகள் ஆகியவற்றின் மீது ஈட்டுக்கடன்கள் வழங்கி வருகிறது. இச்சங்கம், பெட்ரோல் விற்பனை நிலையம், இன்டேன் சமையல் எரிவாயு முகமை, மருந்துக்கடை மற்றும் பல்பொருள் அங்காடி ஆகியவற்றை நடத்துவதன் மூலம் தனது வியாபார நடவடிக்கைகளை விரிவுபடுத்தி வருகிறது.



திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் வியாபார நடவடிக்கைகள் பின் வருமாறு:–

(ரூ. கோடியில்)

| விவரம் | 2013–14 | 2014–15 |
|---|---|---|
| வேளாண் விளைபொருள் விற்பனை | 121.39 | 154.52 |
| வேளாண் உபகரணங்கள் விற்பனை | 0.54 | 0.57 |
| சர்வோ ஆயில் விற்பனை | 17.91 | 19.63 |
| நகைக் கடன் மற்றும் இதர விற்பனை | 160.63 | 148.57 |
| மொத்த வணிகம் | 300.47 | 323.29 |

***4.2.2.*** நீலகிரி மாவட்டம் முழுவதும் மற்றும் கோயமுத்தூர் மாவட்டத்தில் மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியையும் விவகார எல்லையாகக் கொண்டு **நீலகிரி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்** செயல்பட்டு வருகிறது. விவசாயிகளின் விளைபொருட்களை ஆதாயமான விலைக்கு விற்பனை செய்தும், வேளாண் இடுபொருட்களான உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், விதைகள் மற்றும் வேளாண் உபகரணங்கள் போன்றவற்றை விநியோகம் செய்வதோடு,

சங்கத்திற்கு சொந்தமான மேட்டுப்பாளையம் உரக்கலவை பிரிவில் உரக்கலவை தயாரித்து விற்பனை செய்தும் வருகிறது. இச்சங்கம், இன்டேன் சமையல் எரிவாயு முகமையாக செயல்பட்டு வருகிறது. இச்சங்கம், **2013–14**ஆம் ஆண்டில் ரூ.**3.02** கோடி நிகர இலாபமும் மற்றும் **2014–15** ஆம் ஆண்டில் ரூ.**3.19** கோடி உத்தேச இலாபமும் ஈட்டியுள்ளது.

***4.2.3.*** **துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் (TUCAS)** 1955-**இல்** துவக்கப்பட்ட ஒரு தனி வகை (Special type) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு நிறுவனமாகும். இந்நிறுவனம், விவசாயிகளுக்கு வேளாண்மை இடுபொருட்களை விநியோகம் செய்வதுடன், உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள், விதைகள் மற்றும் வேளாண் உபகரணங்களை உற்பத்தி மற்றும் விற்பனை செய்கிறது. **2013–14**ஆம் ஆண்டில், விதை விற்பனை ரூ.**2.76** கோடியாக இருந்தது, **2014–15**ஆம் ஆண்டில், ரூ.**3.38** கோடியாக உயர்ந்துள்ளது. பிற கூட்டுறவு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படும் வேளாண் உபகரணங்களின் மதிப்பு **2013–14**ஆம் ஆண்டில், ரூ.**80.10** இலட்சத்திலிருந்து **2014–15**ஆம் ஆண்டில், ரூ.**101.62** இலட்சமாக உயர்ந்துள்ளது.

## 4.3 வேளாண் விளை பொருள் விற்பனை

***4.3.1*** விவசாயம் செய்யும் உறுப்பினர்கள் தாங்கள் விளைவிக்கும் வேளாண் பொருட்களுக்கு நியாயமான விலை பெறுவதற்கு கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உதவி புரிகின்றன. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்கும் இடையில் பாலமாக செயல்பட்டு வருகின்றன. விவசாய



உறுப்பினர்கள் தங்களின் வேளாண் விளை பொருட்களை இலாபகரமான விலைக்கு விற்பதற்கு ஏதுவாக ஏல விற்பனைக் களங்கள், உலர்களங்கள் மற்றும் கிடங்குகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை இச்சங்கங்கள் ஏற்படுத்தித் தருகின்றன. **2013–14**ஆம் ஆண்டில், ரூ.**750.67** கோடியாக இருந்த வேளாண் விளைபொருள் விற்பனை, **2014–15**ஆம் ஆண்டில், ரூ.**962.99** கோடியாக உயர்ந்துள்ளது.

### *4.3.2. விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம்*

விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம் என்பது கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் முதன்மைப் பணிகளில் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் வேளாண் உறுப்பினர்களின் விளை பொருட்களை நியாயமான விலைக்கு விற்பனை செய்து அவர்கள் பெற்றுள்ள கடன் நிலுவைக்கு வரவு வைக்கப்படும். **2013–14**ஆம் ஆண்டில் ரூ.**1.93** கோடியாக இருந்த விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம், **2014–15**ஆம் ஆண்டில் ரூ.**2.60** கோடியாக உயர்ந்துள்ளது.

## 4.4. தானிய ஈட்டுக்கடன்

விவசாயிகள் தங்களின் வேளாண் விளைபொருட்களை மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்வதிலிருந்து பாதுகாத்திட, விவசாயிகளின் விளை பொருட்களின் சந்தை மதிப்பில் **60** முதல் **80** சதவிகிதம் வரை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தானிய ஈட்டுக்கடன் வழங்கி வருகின்றன. இத்திட்டத்தின் மூலம், விவசாயிகளின் பணத்தேவை உடன் பூர்த்தி செய்யப்படுவதோடு, வேளாண் விளைபொருட்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கக் கிடங்குகளில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு,

அவற்றிற்கு நல்ல விலை கிடைக்கும்போது விற்பனை செய்ய உதவுகிறது. **2014–15**ஆம் ஆண்டில், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் மட்டும் ரூ.**112.67** கோடி அளவிற்கு தானிய ஈட்டுக்கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

## 4.5. நகைக்கடன் வழங்குதல்

விவசாயிகளின் அவசர பொருளாதாரத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் **2014–15**ஆம் ஆண்டில், ரூ.**369.64** கோடி அளவிற்கு நகைக்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 4.6. வேளாண் விளை பொருட்களை பதனிடுதல் மற்றும் அதன் மதிப்பினை கூட்டுதல்

சில கூட்டுறவு விற்பனை சங்கங்களில் அவை சந்தையிடும் வேளாண் விளைபொருட்களை பதனிட்டு, மதிப்புக்கூட்டி விற்பனை செய்திட பஞ்சு அரவை இயந்திரம், பயறு உலர வைக்கும் இயந்திரம், மிளகாய் அரைக்கும் அலகுகள், எண்ணெய் பிழியும் அலகுகள் மற்றும் அரிசி ஆலை ஆகிய பதனிடும் அலகுகள் உள்ளன. இவை விவசாயிகளின் விளைபொருட்களை குறைந்த செலவில் பதனிடும் வசதிகளையும் அளித்து வருகின்றன.

## 4.7. தரமான விதைகள் விற்பனை

நெல், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், தானிய வகைகள் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றின் தரமான விதைகளை கொள்முதல் செய்து, **2014–15**ஆம் ஆண்டில், ரூ.**14.28** கோடி மதிப்பிற்கு விவசாயிகளுக்கு விதைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.



## 4.8. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உர விநியோகம்

***4.8.1.*** இரசாயன உரங்கள், பயிர்கடன் பெறும் விவசாயிகளுக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக விநியோகிக்கப்படுவதுடன் ரொக்கத்திற்கும் விற்பனை செய்யப்படுகிறது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகிய மூன்று நிறுவனங்களும் கூட்டுறவு சங்கங்களுக்கு மொத்த உர விற்பனை முகவர்களாக செயல்படுகின்றன.

***4.8.2.*** *கடந்த மூன்று ஆண்டுகளில் விநியோகிக்கப்பட்ட இரசாயன உரங்களின் விவரம் பின்வருமாறு:–*

| வருடம் | விற்பனை விவரம் | |
|---|---|---|
| | அளவு (மெட்ரிக் டன்னில்) | மதிப்பு (ரூ. கோடியில்) |
| 2012–13 | 5,25,454 | 644.48 |
| 2013–14 | 4,51,134 | 552.67 |
| 2014–15 | 5,80,205 | 665.80 |

***4.8.3.*** **யூரியா விற்பனை**

**2013–14**ஆம் ஆண்டில், **2,13,738** மெட்ரிக் டன்களாக இருந்த யூரியா விற்பனை **2014–15** ஆம் ஆண்டில், **3,01,324** மெட்ரிக் டன்களாக உயர்ந்துள்ளது. மாநில மொத்த யூரியா விற்பனையில் கூட்டுறவு நிறுவனங்களின் பங்கு, **2013–14**இல் **23** சதவிகிதமாக இருந்தது. இது, **2014–15**இல், **30** சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

## 4.9. மொத்த வணிகம்

ஓராண்டிற்கு முன் ரூ.2,229.18 கோடியாக இருந்த வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மொத்த வணிகம், 2014–15ஆம் ஆண்டில், ரூ.2,323.65 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது.

## 5. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் செயல்படுத்தி வரும் சிறப்புத் திட்டங்கள்

### 5.1 சூரியசக்தி உலர்கலன்கள் அமைத்தல்

தென்னை விவசாயிகள் பயனுறும் வகையில், தேங்காயை தரமான கொப்பரையாகத் துரிதமாக மாற்ற, 10 மாவட்டங்களில் 28 சூரிய சக்தி கொப்பரை உலர்கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் 2014–15ஆம் ஆண்டில், 6,35,316 தேங்காய்கள் கொப்பரையாக மாற்றப்பட்டுள்ளன.

### 5.2. கணினி எடைமேடைகள் அமைத்தல்

வேளாண் விளைபொருட்கள் துல்லியமாக எடையிடப்படுவதை உறுதிபடுத்திட, ஈரோடு மாவட்டத்தில் உள்ள பெருந்துறை, பவானி மற்றும் மதுரை மாவட்டத்தில் உள்ள உசிலம்பட்டி ஆகிய இடங்களில் அமைந்துள்ள கூட்டுறவு விற்பனை சங்கங்களில் 2013–14ஆம் ஆண்டில், தலா ரூ.18.89 இலட்சம் மதிப்பில் கணினி எடைமேடைகள் நிறுவப்பட்டுள்ளன. இதனால் இந்த மண்டலங்களில் உள்ள விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் பெரிதும் பயன் அடைந்து வருகின்றனர்.



*5.2.2.* இதே போல், 2014–15ஆம் ஆண்டில், நீலகிரி மற்றும் துறையூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் மொத்தம் ரூ.41.55 இலட்சம் மதிப்பில் கணினி எடைமேடைகள் நிறுவப்பட்டுள்ளன.

### 5.3. விதை சுத்திகரிப்பு இயந்திரம் நிறுவுதல்

துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனத்தில் தரமான விதைகளை விவசாயிகளுக்கு விநியோகிக்க, ரூ.19.13 இலட்சம் மதிப்பில் விதை சுத்திகரிப்பு இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. 2014–15ஆம் ஆண்டில், 1,362.18 மெட்ரிக் டன் அளவிற்கு விதைகள் சுத்திகரிக்கப்பட்டுள்ளன.

### 5.4. வேளாண் விளைபொருள் பதனிடும் அலகுகள் நிறுவுதல்

பயறு, எள், மிளகாய் போன்ற வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டுவதால் உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கிடைக்கிறது. எனவே, விவசாயிகளுக்கு உதவும் பொருட்டும் மற்றும் நுகர்வோர்களுக்கு தரமான பொருட்களை நியாயமான விலையில் விநியோகம் செய்யவும், ரூ.91.35 இலட்சம் மதிப்பில் ஐந்து பதனிடும் அலகுகள் பேரையூர், திருமங்கலம், சிதம்பரம், திருச்செங்கோடு மற்றும் பெருந்துறையில் நிறுவப்பட்டுள்ளன.

### 5.5. உரக் கலவை இயந்திரம் நிறுவுதல்

2008ஆம் ஆண்டு முதல் நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் உரக் கலவை உற்பத்தி செய்யப்பட்டுவருகிறது. உரக்கலவை உற்பத்தி அளவினை மேலும் அதிகரிக்க ரூ.15 இலட்சம் மதிப்பில், புதிய உரக் கலவை இயந்திரம் ஒன்று நீலகிரி கூட்டுறவு விற்பனை

சங்கத்தின் மேட்டுப்பாளையம் கிளையில் நிறுவப்பட்டுள்ளது.

### 5.6. உலர்களங்கள் அமைத்தல்

வேளாண் பெருமக்கள் அவர்களின் விளைபொருட்களை உலரவைத்து, தரம் பிரித்து, ஆதாய விலையில் விற்பதற்கு ஏதுவாக 2014–15ஆம் ஆண்டில், ஆலங்குடி, திருமயம், அறந்தாங்கி மற்றும் திருமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில், மொத்தம் ரூ.23.35 இலட்சம் மதிப்பில் உலர்களங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## 6. ஊரகக் கிடங்குகள் கட்டுமானம்

கிராமப்புற விவசாயிகள் அறுவடைக்காலங்களில் தங்களின் விளை பொருட்களை குறைந்த விலையில் விற்பனை செய்வதை தவிர்த்து, அவர்களுக்கு ஆதாய விலை கிடைக்கும் வரை சேமித்து வைத்து விற்பனை செய்ய உதவும் நோக்கத்தில், தமிழ்நாட்டில் கிடங்கு வசதிகளை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டது. இதன் விளைவாக கடந்த நான்கு ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவிற்கு சேமிப்பு கொள்ளளவு கீழ்கண்டவாறு அதிகரிக்கப்பட்டுள்ளது:–

**6.1.** 2011–2012ஆம் ஆண்டில், நபார்டு ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டம் XVII–இன் கீழ், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ரூ.107.26 கோடி மதிப்பீட்டில் 1,166 கிடங்குகள் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதில் ரூ.105.47 கோடியை அரசு மானியமாக



வழங்கியுள்ளது. அனைத்து கிடங்குகளும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு விவசாயிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இவ்வாறு 1,166 கிடங்குகள் கட்டப்பட்டதன் மூலம் கிராமப்புறங்களில் உள்ள கிடங்குகளின் கொள்ளளவு, 1,55,300 மெட்ரிக் டன் அளவிற்கு உயர்ந்துள்ளது.

**6.2**. 2012–13ஆம் ஆண்டில், நபார்டு ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் XVIII-இன் கீழ், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ரூ.129.762 கோடி மதிப்பீட்டில் 1,29,400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 1,104 கிடங்குகள் கட்ட, அரசு அனுமதி வழங்கியது. இதில் ரூ.128.80 கோடியை அரசு மானியமாக வழங்கியுள்ளது. அனைத்து கிடங்குகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**6.3**. சேமிப்பு கிடங்கு உட்கட்டமைப்பு திட்டத்தின் (2013–2014) கீழ், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ரூ.140.94 கோடி மதிப்பீட்டில் 1,24,100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட, 1,044 கிடங்குகள் கட்ட அரசு அனுமதி வழங்கியது. இதில் ரூ.139.72 கோடியை அரசு மானியமாக வழங்கியுள்ளது. இதுவரை 1,008 கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதர கிடங்குகளின் கட்டுமானப்பணி பல்வேறு நிலையில் உள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு ரூ.177 இலட்சத்தில் 3 கிடங்குகள் தலா 1000 மெ.டன் கொள்ளளவில் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதில் ரூ.159.30 இலட்சத்தை அரசு மானியமாக வழங்கியுள்ளது. இக்கிடங்குகள் கோவில்பட்டி,

கிருஷ்ணகிரி மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன.

இக்கிடங்குகள் கட்டப்படுவதால் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தால் விவசாயிகளுக்கு உரங்களை உரிய நேரத்தில் நகர்வு செய்ய ஏதுவாகும்.

**6.4.** 2014-15ஆம் ஆண்டில், சேமிப்பு கிடங்கு உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ரூ.109.89 கோடி மதிப்பீட்டில் 98,800 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 562 கிடங்குகள் கட்ட அரசு அனுமதி வழங்கியது. இதில் ரூ.107.73 கோடியை அரசு மானியமாக வழங்கியுள்ளது.

**6.5** இச்சிறப்புத் திட்டங்களின் கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ள 3,278 கிடங்குகளின் மூலம் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள கிடங்குகளின் கொள்ளளவு கடந்த நான்கு வருடங்களில், 8 இலட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து கிட்டத்தட்ட 12 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. இவ்வாறான சீரிய முயற்சிகள் விவசாயிகளுக்கு மிகவும் உதவியாக உள்ளன. ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டங்களின் மூலம் கட்டப்பட்டு துவக்கி வைக்கப்பட்ட கிடங்குகளில் 2014–15ஆம் ஆண்டில், 12,795 விவசாயிகள் ரூ.319.28 கோடி மதிப்புள்ள 1,04,709 மெட்ரிக் டன் வேளாண் விளைபொருட்களை சேமித்து அவைகளை ஈடாக வைத்து, ரூ.166.29 கோடி தானிய ஈட்டுக் கடன் பெற்றுள்ளனர்.

**6.6.** தமிழ்நாடு அரசின் சிறப்பு நடவடிக்கைகளின் காரணமாக, சேமிப்பு கிடங்கு வளர்ச்சி ஒழுங்கு முறை



ஆணையத்தின் (WDRA) நடைமுறையில் உள்ள குறைந்தபட்சம் 250 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளுக்கு மட்டுமே தரச்சான்றிதழ் வழங்கப்படும் என்ற நிபந்தனையை தளர்த்தி, 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளுக்கு தரச்சான்றிதழ் வழங்க சேமிப்பு கிடங்கு வளர்ச்சி ஒழுங்கு முறை ஆணையம் ஒப்புக் கொண்டுள்ளது. இதுவரை, 135 கிடங்குகள் சேமிப்பு கிடங்கு வளர்ச்சி ஒழுங்கு முறை ஆணையத்திடம் பதிவு செய்யப்பட்டுள்ளன. இக்கிடங்குகளின் மூலம் 88 விவசாயிகளுக்கு கிடங்கு செலாவணி பற்றுச் சீட்டு வழங்கப்பட்டு ரூ.194.29 இலட்சம் தானிய ஈட்டுக் கடன் மிகக் குறைந்த 7 சதவீத வட்டியில் வழங்கப்பட்டுள்ளது. இச் சிறப்புத் திட்டம், சிறு மற்றும் குறு விவசாயிகள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

## 7. அலுவலகக் கட்டடம் கட்டுதல்

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சேவையை அதிகரிக்கும் பொருட்டு, 2014–15ஆம் ஆண்டில், திருவண்ணாமலை, போளூர், செங்கம் மற்றும் காரமடை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் மொத்தம் ரூ.1.47 கோடி மதிப்பில் அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 8. பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறைகள் கட்டுதல்

**8.1.** விவசாயிகளுக்கு வழங்கப்படும் நகைக்கடனுக்கு ஈடாக வைத்திடும் நகைகளைப் பாதுகாக்க, வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ரூ.145.53 இலட்சம் மதிப்பில் 25 பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, இந்த கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 2013–14 ஆம் ஆண்டில், ரூ.27.11 கோடி அளவிற்கு வழங்கப்பட்டிருந்த நகைக்கடன், 2014–15ஆம் ஆண்டில், ரூ.49.69 கோடியாக உயர்ந்துள்ளது.

**8.2** 2014–15ஆம் ஆண்டில், 12 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ரூ.81.30 இலட்சம் செலவில் பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

## 9. பெரும்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் (LAMPS).

**9.1.** பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய நோக்கங்களாவன, மலைவாழ் மக்கள் பயிரிடும் பயிர் உற்பத்தியை அதிகரித்தல், அவர்களின் வேலைவாய்ப்பை அதிகரித்தல், ஒருங்கிணைந்த கடன் வழங்கல் மூலம் அவர்களின் வருவாயைப் பெருக்குதல் மற்றும் பொது விநியோக திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்களை விநியோகித்தல் ஆகியவை ஆகும். இச்சங்கங்கள், மலைவாழ் மக்களுக்கு வேளாண் உற்பத்திக்கென கடன் வழங்குதல், இடுபொருட்கள் வழங்குதல், வேளாண் விளைபொருள் விற்பனை, அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் போன்ற பல்வேறு சேவைகளை வழங்கி வருகின்றன. நீலகிரி மாவட்டத்தில் புதியதாக துவக்கப்பட்டுள்ள பந்தலூர் வட்ட



தொல்பழங்குடியினர் பெரும்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் கோத்தகிரி வட்ட மலைவாழ் பழங்குடியினர் பெரும்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் தருமபுரி மாவட்டம் சிட்லிங் மலைவாழ் மக்கள் பெரும்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகிய 3 மலைவாழ் பழங்குடியினர் பெரும்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுடன் சேர்த்து தற்போது மாநிலத்தில் செயல்படும் பெரும்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 22 ஆகும்.

**9.2.** மேற்படி 22 பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் 99,132 பழங்குடியினரும் 17,477 பழங்குடியினரல்லாதோரும் உறுப்பினர்களாக உள்ளனர். 2014–15ஆம் ஆண்டில் பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், ரூ.129.29 கோடி அளவிற்கு வணிகம் செய்துள்ளன.

## 9.3. மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்

மலைவாழ் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த, அவர்கள் உற்பத்தி செய்யும் சிறு வனப் பொருட்களான தேன், சாமை, வரகு மற்றும் புளி ஆகியவற்றை விற்பனை செய்வதன் மூலம் அவற்றிற்கு ஆதாய விலை கிடைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டது. அதனடிப்படையில், பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், மேற்படி சிறு வனப் பொருட்களை மலைவாழ்மக்களிடமிருந்து கொள்முதல் செய்து, அவற்றிற்குப் பொதுவான வணிக முத்திரையிட்டு, உறையிலிட்டு விற்பனை செய்து வருகின்றன. மலைவாழ் மக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை மதிப்புக் கூட்ட

ஏதுவாக ஜவ்வாதுமலை மலைவாழ் மக்கள் பெரும்பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தில் சாமை அரவை இயந்திரம் நிறுவிட ரூ.1.50 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது.

**9.4.** மலைவாழ் மக்கள் உற்பத்தி செய்யும் தேன், சாமை, வரகு மற்றும் புளி ஆகியவற்றிற்கு பொதுவான வணிக முத்திரையிட்டு அப்பொருட்களின் விற்பனை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால் 20.06.2013 அன்று துவக்கி வைக்கப்பட்டது. 31.07.2015 வரையிலான இப்பொருட்களின் விற்பனை பின்வருமாறு:—

| பொருள் | அளவு (மெ.டன்) | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| தேன் | 5.98 | 17.30 |
| சாமை | 24.03 | 11.65 |
| புளி | 32.97 | 23.33 |
| வரகு | 7.72 | 5.05 |
| | **மொத்தம்** | **57.33** |

## 9.5. பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் நிதியுதவி

பெரும்பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களின் மலைவாழ் உறுப்பினர்களின் கடன் பெறும் தகுதியினை அதிகரித்திடவும், வட்டிச் சுமையைக் குறைத்திடவும், பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் பங்குத்தொகை



மானியம், வட்டி மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2014–15ஆம் ஆண்டில், ரூ.90 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## 10. தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ்நாட்டில் 60 தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் 23,481 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் ஒப்பந்தப் பணிகள் பெற்று உறுப்பினர்கள் வாழ்வாதாரம் பெறும் வகையில் வேலைவாய்ப்பை அளித்து வருகின்றன.

## 11. கூட்டுறவு அச்சகங்கள்

**11.1.** தமிழ்நாட்டில் 26 கூட்டுறவு அச்சகங்கள் 12,438 உறுப்பினர்களைக் கொண்டு ரூ.2.36 கோடி பங்கு மூலதனத்துடன் செயல்பட்டு வருகிறது. இதுவரை கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான புத்தகங்கள் மற்றும் படிவங்களை மட்டுமே அச்சடித்து வந்த இக் கூட்டுறவு அச்சகங்களை நவீனப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் முதற்கட்டமாக, தனியார் அச்சகங்களுக்கு நிகராக செயல்படும் வகையில் சென்னை, வேலூர், சேலம், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 7 கூட்டுறவு அச்சகங்களில் ரூ.3.68 கோடி மதிப்பீட்டில் கணினி எழுதுபொருட்கள் தயாரிக்கும் மற்றும் அச்சடிக்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டு நவீனமயமாக்கப்பட்டுள்ளன. இதனால், தற்போது கூட்டுறவு நிறுவனங்களுக்கு மட்டுமின்றி, அரசு மற்றும்

அரசு சார்ந்த நிறுவனங்களுக்கும் தேவையான அச்சுப் பணிகளை மேற்கொள்ள இயலும். 2014–15 ஆம் ஆண்டில், இந்த நவீனமயமாக்கப்பட்ட கூட்டுறவு அச்சகங்களில், ரூ.213.25 இலட்சம் மதிப்புள்ள 1,402 பணி ஆணைகள் பெறப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

**11.2**. 2013–14ஆம் ஆண்டில் ரூ.53.57 கோடியாக இருந்த கூட்டுறவு அச்சகங்களின் வியாபார முன்னேற்றம், 2014–15ஆம் ஆண்டில் ரூ.60.31 கோடியாக உயர்ந்துள்ளது.

**11.3. திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு அச்சகத்திற்கு சொந்த கட்டடம் கட்டுதல்–** திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு அச்சகத்திற்கு ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் சொந்த கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டு கட்டுமானப்பணி முன்னேற்றத்தில் உள்ளது.

## 12. தேசிய விருதுகள்

கூட்டுறவு கடன் சங்கங்களைப் போன்றே, கூட்டுறவு விற்பனை சங்கங்களின் செயல்பாடுகளும் தேசிய அளவில் வெகுவாக பாராட்டுதல்களைப் பெற்றுள்ளன. கூட்டுறவு விற்பனை சங்கங்கள் பெற்றுள்ள தேசிய விருதுகள் பின்வருமாறு:

**12.1.** பின்வரும் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் அவற்றின் செயல்பாட்டிற்காக **சிறந்த கூட்டுறவு விற்பனை சங்கம் என்னும் விருதினை** இந்திய தேசிய கூட்டுறவு ஒன்றியத்திடமிருந்து 25.06.2013 அன்று பெற்றுள்ளன:



**i)** தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்

**ii)** பொள்ளாச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம்

**iii)** பட்டுக்கோட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம்

**iv)** உடுமலைப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம்

**12.2.** ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம், மே–2015இல் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் நடைபெற்ற தேசிய நறுமணப்பொருட்கள் பொருட்காட்சியில் **சிறப்பான செயல்பாட்டிற்காக 'சிறந்த சங்கமாக'** தேர்வு செய்யப்பட்டு சிறப்பு பரிசினை பெற்றுள்ளது.

இயல் – III

# நுகர்வோர் கூட்டுறவுகள்

## 1. முன்னுரை

தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவு அமைப்பானது, மாநில அளவில், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தையும், மாவட்ட அளவில் 34 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளையும், தொடக்க அளவில் 371 பிரதம கூட்டுறவு பண்டகசாலைகளையும் உள்ளடக்கிய மூன்றடுக்கு அமைப்பாக செயல்பட்டு வருகின்றது. வெளிச்சந்தையில் விலை உயர்வினைக் கட்டுப்படுத்தி, பொதுமக்களுக்கு தரமான பொருட்களை நியாயமான விலையில் வழங்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு நுகர்வோர் கூட்டுறவுகள் செயல்பட்டு வருகின்றன.

## 2. செயல்பாடுகள்

**2.1.** தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட மற்றும் பிரதம கூட்டுறவு பண்டகசாலைகளின் தலைமை நிறுவனமாக தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் செயல்பட்டு வருகின்றது. இணைப்புச் சங்கங்களுக்கான, அத்தியாவசிய நுகர்பொருட்களை கொள்முதல் செய்வதற்கென, ஒருங்கிணைப்பு முகமையாக செயல்பட்டு வருகின்றது.

**2.2.** மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், 40 பல்பொருள் அங்காடிகள் (Super Market), 75 சிறு பல்பொருள் அங்காடிகள் (Mini Super



Market), 113 மருந்தகங்கள், 34 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள், 26 அம்மா மருந்தகங்கள், 7 பெட்ரோல் வழங்கும் நிலையங்கள், 35 சமையல் எரிவாயு வழங்கும் மையங்கள், 3,207 நியாயவிலைக் கடைகள் மற்றும் 84 மண்ணெண்ணெய் வழங்கும் மையங்களையும் நடத்தி வருகின்றன. மேலும் இவை முதன்மைச் சங்கங்களாக செயல்பட்டு பொது விநியோகத் திட்டத்தின்கீழ், நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை அனுப்பும் பணியிலும் ஈடுபட்டு, பொது விநியோகத் திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்துவதிலும் பெரும் பங்காற்றி வருகின்றன.

**2.3.** இதே போன்று பிரதம கூட்டுறவு பண்டகசாலைகள், 31 மருந்தகங்கள், 2,081 நியாயவிலைக் கடைகள், 24 அம்மா மருந்தகங்கள், 9 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளை நடத்தி, மாவட்ட கூட்டுறவு பண்டகசாலையால் வழங்கப்படும் அனைத்து சேவைகளையும் மக்களுக்கு வழங்கி வருகின்றன.

## 3. வியாபாரம்

**3.1.** தயாரிப்பு நிறுவனங்கள் (Manufacturers), உற்பத்தி மையங்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் (Cooperative Marketing Societies) மற்றும் கூட்டுக் கொள்முதல் குழு (Joint Purchase Committee) மூலம் தரமான நுகர்பொருட்களை இந்நுகர்வோர் கூட்டுறவுகள், மொத்தமாகவும், நேரடியாகவும் கொள்முதல் செய்து நியாயமான விலையில் நுகர்வோர்களுக்கு விற்பனை செய்து வருகின்றன.

**3.2.** தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் மூலம் 2014–15ஆம் ஆண்டில், நுகர்பொருட்கள், எழுதுபொருள், பட்டாசு, கணினி எழுது பொருட்கள் (Peripherals) மற்றும்

பெட்ரோலியப் பொருட்கள், ரூ.18.45 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**3.3.** 2014–15ஆம் ஆண்டில், மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், ரூ.825.78 கோடி மதிப்பிற்கு கட்டுப்பாட்டுப் பொருட்களையும், ரூ.636.03 கோடி மதிப்பிற்கு கட்டுப்பாடற்ற பொருட்களையும் விற்பனை செய்துள்ளன.

**3.4.** இதே போன்று பிரதம கூட்டுறவு பண்டகசாலைகள், 2014–15ஆம் ஆண்டில் ரூ.250.74 கோடி அளவில் கட்டுப்பாட்டுப் பொருட்களையும், ரூ.311.88 கோடி அளவில் கட்டுப்பாடற்ற பொருட்களையும் விற்பனை செய்துள்ளன.

**3.5.** 2014–15ஆம் ஆண்டில் அனைத்து நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களின் வழியாக ரூ.3,409.44 கோடி அளவிற்கு மொத்த வணிகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 4. அம்மா மருந்தகங்கள்

**4.1.** 2014–15ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், "100 அம்மா மருந்தகங்கள் புதியதாகத் தொடங்கப்படும்", எனும் அறிவிப்பினை நிறைவேற்றும் விதமாக, 10 அம்மா மருந்தகங்கள் காஞ்சிபுரம், கடலூர், ஈரோடு, மதுரை, சிவகங்கை, சேலம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் 26.06.2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டன. நாளது தேதிவரை 32 மாவட்டங்களில் 100 அம்மா மருந்தகங்கள் புதியதாக தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. மருந்தகங்களின் உட்கட்டமைப்பு மற்றும் நடைமுறை மூலதனம் போன்றவற்றிற்காக மருந்தகம்



ஒன்றிற்கு ரூ.10 லட்சம் வீதம், விலைக் கட்டுப்படுத்தும் நிதியிலிருந்து ரூ.10 கோடி அரசு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

**4.2.** கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் மருந்தகங்களில், மருந்துகள் 15% வரை தள்ளுபடி விலையில் பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. இம்மருந்தகங்கள் மூலம், 2014–15ஆம் ஆண்டில் ரூ.73.75 கோடி அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டின் முதல் நான்கு மாதங்களில் மட்டும் (31.07.2015 வரை) ரூ.34.45 கோடி மதிப்பிற்கு மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## 5. பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள்

**5.1.** வெளிச்சந்தையில் உயர்ந்து வந்த காய்கறிகளின் விலையினை கட்டுப்படுத்த, நகர்ப்புற பகுதிகளில் கூட்டுறவு அமைப்புகள் மூலம், இடைத்தரகரின்றி நுகர்வோர்களையும் விவசாயிகளையும் நேரடியாக இணைக்கக்கூடிய பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் திறக்கப்பட்டன. இதன்மூலம் விவசாயிகள் விளைவிக்கும் பொருட்களை அவர்களது விளைநிலங்களிலிருந்தே நியாயமான விலையில் கொள்முதல் செய்யப்படுவதுடன், விளை பொருட்களுக்கான தொகையும், உடனடியாக வழங்கப்படுகின்றது.

**5.2.** நாளது தேதியில், 2 நகரும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் உள்ளிட்ட 58 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் 31 வகையான தரமான காய்கறிகள்

நியாயமான விலையில் நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. சென்னையில் செயல்படும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில் விற்பனை செய்வதற்கான காய்கறிகளை, கிருஷ்ணகிரி, நீலகிரி மற்றும் திண்டுக்கல் மாவட்ட விவசாயிகளிடமிருந்து, கொள்முதல் செய்து அனுப்புவதற்காக மூன்று வாகனங்கள், தலா ரூ.14 இலட்சம் வீதம் ரூ.42 இலட்சம் மதிப்பில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டன. செட்டிபள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம், நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம், பழனி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகியவற்றிற்கு தலா ஒரு வாகனம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, காய்கறிகள் அனைத்தும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளை சென்றடையும் வரையில் பசுமையாக (Fresh) இருக்க ஏதுவாக அவற்றில் குளிர்சாதன வசதியுடனான உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.15.40 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**5.3.** பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் நடத்த சுழல் நிதியாக ரூ.7.34 கோடி விலை கட்டுப்படுத்தும் நிதியிலிருந்து அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது. உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் தோற்றப் பொலிவினை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கென ரூ.1.15 கோடி, கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து, இப்பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் நடத்த வழங்கப்பட்டுள்ளது. பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில் 31.03.2015 வரை, 7,869 மெட்ரிக் டன் காய்கறிகள் ரூ.22.38 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.



## 6. ஒரு கிலோ அரிசி ரூ.20/– திட்டம்

அரிசி விலை வெளிச்சந்தையில் உயர்வதைக் கட்டுப்படுத்தும் விதமாக கூட்டுறவுச் சங்கங்களில் 273 விற்பனை நிலையங்கள் மூலம், ஒரு கிலோ அரிசி ரூ.20/–க்கு விற்பனை செய்யும் திட்டத்தின் கீழ் ரூ.14.80 கோடி மதிப்பிலான 7,400 மெட்ரிக் டன் அரிசி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 7. இதர சந்தை குறுக்கீட்டு நடவடிக்கைகள்

**7.1.** சந்தை குறுக்கீட்டு திட்டத்தின்படி, வெளிச்சந்தையில் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயரும் போது, விலை உயர்வினை கட்டுப்படுத்திட, துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு, மிளகாய், புளி மற்றும் நல்லெண்ணெய் ஆகிய அத்தியாவசியப் பொருட்களை விலைக்குறைவான இடங்களிலிருந்து கொள்முதல் செய்து, நுகர்வோர் கூட்டுறவு கடைகளில் விற்பனை செய்திட அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை 01.11.2014க்கு பின்னர் மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டித்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

**7.2.** 2014–15ஆம் ஆண்டில் அத்தியாவசியப் பொருட்களை கொள்முதல் செய்வதற்கென தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு அரசால் நடைமுறை மூலதன நிதியுதவியாக ரூ.6 கோடி, விலைக் கட்டுப்படுத்தும் நிதியிலிருந்து வட்டியில்லாக் கடனாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

**7.3** துவரம்பருப்பு மற்றும் உளுந்தம் பருப்பின் வெளிச்சந்தை விலையினை கட்டுப்படுத்திடும் சந்தை

குறுக்கீட்டு நடவடிக்கையாக, துவரம்பருப்பு மற்றும் உளுந்தம் பருப்பு நியாயமான விலையில் விற்பனை செய்யும் திட்டம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24.05.2015 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையம் (NCCF) மூலம், துவரம்பருப்பு மற்றும் உளுந்தம் பருப்பினை கொள்முதல் செய்து, சென்னையில் 20 கூட்டுறவு விற்பனை மையங்கள் மற்றும் 5 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் விற்பனை மையங்கள் வாயிலாக இவை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு விற்பனை விலை விவரம்:**

| வ.எண் | பொருள் | 1/2 கிலோ பாக்கெட்டின் விற்பனை விலை ரூ. |
|---|---|---|
| 1 | துவரம்பருப்பு | 53.50 |
| 2 | உளுந்தம் பருப்பு (ஏ ரகம்) | 56.00 |
| 3 | உளுந்தம் பருப்பு (பி ரகம்) | 49.50 |





## பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவு

### 1. முன்னுரை

தமிழகத்தில் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. பொது விநியோகத் திட்டத்தை செயல்படுத்துவதில் பெருவாரியான நியாய விலைக் கடைகளை நடத்துவதன் மூலம் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் பங்காற்றி வருகின்றன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளில் இருப்பு வைக்கப்படும் அத்தியாவசியப் பொருட்களை, நியாய விலைக் கடைகளுக்கு கொண்டு சேர்க்கும் பணியை 94 முதன்மைச் சங்கங்கள், அதாவது 25 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும், 57 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், 9 பிரதம கூட்டுறவுப் பண்டகசாலைகளும், 2 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும், 1 நகரக் கூட்டுறவுக் கடன் சங்கமும் மேற்கொண்டு வருகின்றன. இந்த முதன்மைச் சங்கங்கள் 4,193 இணைப்புச் சங்கங்கள் நடத்தும் நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளிலிருந்து நகர்வு செய்து வருகின்றன. இதைத் தவிர, 7 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும், 31 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், 147 பிரதம கூட்டுறவுப் பண்டகசாலைகளும், 119 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும், 7 பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், 11 இதர வகை கூட்டுறவுச் சங்கங்களும், ஆக மொத்தம் 322 கூட்டுறவுச் சங்கங்கள் சுயஎடுப்பு சங்கங்களாக செயல்பட்டு வருகின்றன.

## 2. நியாய விலைக் கடைகள்

கூட்டுறவுச் சங்கங்கள், **32,105** நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன. அவற்றில், **23,551** முழு நேர நியாயவிலைக் கடைகளாகவும், **8,554** பகுதி நேர நியாயவிலைக் கடைகளாகவும் செயல்பட்டு வருகின்றன. மண்ணெண்ணெய் வழங்குவதற்கென்று பிரத்யேகமாக **260** மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள், கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. மொத்தம் **1,82,61,369** குடும்ப அட்டைதாரர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகள் வாயிலாக, அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன. மேலும், சிறப்பு பொது விநியோகத் திட்ட பொருட்களான துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு, பாமாயில் மற்றும் ஊட்டி டீ, அரசு உப்பு போன்ற கட்டுப்பாடற்ற பொருட்களும் நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

## 3. நகரும் நியாய விலைக் கடைகள்

**3.1.** நகரும் நியாய விலைக் கடைகளை செயல்படுத்த, 2012–13 ஆம் ஆண்டில், 10 பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு தலா ஒரு வாகனம் வீதம் 10 வாகனங்கள் பிரதம கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.94.95 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டது.

**3.2.** 2013–14 ஆம் ஆண்டில், மேலும் 5 வாகனங்கள் வழங்கப்பட்டன. இவற்றில் விழுப்புரம் மாவட்டத்தில் மோட்டாம்பட்டி மற்றும் கிளாக்காடு ஆகிய இரண்டு பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் இராவணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம், சென்னை நகர் பகுதியில்



திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம், பூங்கா நகர் மொத்த விற்பனை கூட்டுறவு பண்டகசாலை ஆகிய சங்கங்களுக்கு, தலா ஒரு வாகனம் வீதம், 5 வாகனங்கள் பிரதம கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்தும், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்தும் ரூ.66.82 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டது.

**3.3.** மேலும், நடப்பாண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் சொக்கலால் ஆலை தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலை மற்றும் இருக்கன்துறை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 2 நகரும் நியாய விலைக் கடைகள் இயங்குகின்றன.

**3.4.** மலைப் பகுதிகளிலும் மற்றும் எளிதில் அணுக இயலாத ஊரகப் பகுதிகளிலும் அத்தியாவசியப் பொருட்களை, மக்களின் இருப்பிடத்திற்கே கொண்டு சென்று விநியோகிக்க 31 நகரும் நியாயவிலைக் கடைகள் இயக்கப்படுகின்றன. இவை தவிர, சென்னை நகரில் 2 நகரும் நியாய விலைக் கடைகளும் இயக்கப்படுகின்றன.

## 4. அரசு மானியம்

கூட்டுறவுச் சங்கங்கள் இலாப நோக்கின்றி நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன. மேலும் அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலேயே குடும்ப அட்டைதாரர்களுக்கு பொது விநியோகத் திட்டப் பொருட்களை வழங்கி வருகின்றன. இதனால் கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொண்ட செலவினத்தில் ஏற்படும் இழப்பினை ஈடுகட்டும் பொருட்டு, பொது விநியோகத் திட்ட மானியம் அரசால் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது:–

(ரூ.கோடியில்)

| வ.எண் | ஆண்டு | மானியம் |
|---|---|---|
| 1 | 2010–11 | 150.00 |
| 2 | 2011–12 | 150.00 |
| 3 | 2012–13 | 120.00 |
| 4 | 2013–14 | 120.00 |
| 5 | 2014–15 | 120.00 |

## 5. நியாய விலைக் கடைகளுக்கு கட்டடங்கள் கட்டுதல்

தமிழ்நாட்டில் கூட்டுறவு சங்கங்களால் நடத்தப்படும் 32,105 நியாய விலைக் கடைகளில், 4,205 நியாய விலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களின் சொந்தக் கட்டடத்திலும், 14,937 நியாய விலைக் கடைகள் அரசு கட்டடத்திலும், 5,183 நியாய விலைக் கடைகள் இலவச கட்டடத்திலும், 7,780 நியாய விலைக் கடைகள் வாடகை கட்டடத்திலும் செயல்பட்டு வருகின்றன. வாடகை கட்டடங்களில் செயல்படும் நியாய விலைக் கடைகளை படிப்படியாக சொந்த கட்டடங்களுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2013–14ம் ஆண்டில், 395 நியாய விலைக் கடைகளுக்கும், 2014 –15ம் ஆண்டில், 259 நியாய விலைக் கடைகளுக்கும், புதியதாக கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

## 6. நியாய விலைக் கடைகளின் இருப்பை குறுஞ்செய்தி வசதி மூலம் கண்காணித்தல்



பொது விநியோகத் திட்டத்தினை சிறப்பாக கண்காணிக்கும் பொருட்டு, அன்றாடம் அத்தியாவசியப் பொருட்கள் நியாயவிலைக் கடைகளுக்கு நகர்வு செய்வதையும், நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்களின் இறுதி இருப்பு நிலையினையும் அறிந்துகொள்வதற்கு ஏதுவாக, ரூ.31.74 இலட்சம் செலவில் வலைதள மற்றும் குறுஞ்செய்தி வசதி (Web and SMS based monitoring system) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசதி ஏற்படுத்தியதனால், அத்தியாவசியப்பொருட்கள் குறைவாக உள்ள நியாய விலைக் கடைகள் உடனடியாக கண்டறியப்பட்டு, அக்கடைகளுக்கு உடனுக்குடன் பொருட்கள் அனுப்பப்படுகிறது.

## 7. ‘ஊட்டி டீ’ விற்பனை

நீலகிரி மாவட்டத்தில், கடந்த 2001 ஆம் ஆண்டில், உலகச் சந்தையில் தேயிலை தூளுக்கு ஏற்பட்ட கடும் விலை வீழ்ச்சியின் காரணமாக வாழ்வாதாரத்தை இழந்து பாதிக்கப்பட்ட சிறு தேயிலை விவசாயிகளின் துயர் துடைக்கும் பொருட்டு, பொதுவிநியோகத் திட்டத்தின் மூலம் இண்ட்கோசர்வ் (INDCOSERVE) நிறுவனத்திலிருந்து ஊட்டி டீ கொள்முதல் செய்யப்பட்டு கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. 2014–15ம் ஆண்டு 3,099 மெட்ரிக் டன் ‘ஊட்டி டீ’ கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 8. அரசு உப்பு விற்பனை

அயோடின் பற்றாக்குறையால் ஏற்படும் நோய்களிலிருந்து மக்களைக் காப்பாற்றும் பொருட்டு, தமிழ்நாடு உப்பு நிறுவனத்திடமிருந்து அயோடின் கலந்த அரசு உப்பு கொள்முதல் செய்யப்பட்டு, கூட்டுறவுத்துறை நடத்தும் நியாய விலைக் கடைகள் மூலமாக, விற்பனை செய்யப்படுகின்றது. 2014–15ம் ஆண்டில், 29,720 மெட்ரிக் டன் அயோடின் கலந்த உப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 9. நியாய விலைக் கடைகளில் காலிப் பணியிடங்களை நிரப்புதல்

நியாய விலைக் கடைகளிலுள்ள காலிப்பணியிடங்களை நிரப்பும் பொருட்டு, மாவட்ட ஆள்சேர்ப்பு மையங்களால், வேலை வாய்ப்பகம் மூலம் பட்டியல் பெற்றும், செய்திதாள்களில் விளம்பரம் செய்தும், நேரடியாக விண்ணப்பங்கள் பெற்றும் 2012–13, 2013–14 மற்றும் 2014–15 ஆகிய ஆண்டுகளில் 6,684 விற்பனையாளர்களும், 1,802 கட்டுநர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.



இயல் – V

# கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

## 1. முன்னுரை

கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் அறிவுத் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் கூட்டுறவுக் கல்வி, பயிற்சி, விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும், மாவட்ட அளவில் 29 மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும் மேற்கொண்டு வருகின்றன. மேலும், இந்நிறுவனங்கள் பொருட்காட்சிகள், கருத்தரங்குகள் மற்றும் கூட்டுறவு வார விழாக்களையும் நடத்துகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவுச் சங்கங்களின் நிகர இலாபத்தில் ஒரு பகுதியை கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக்கும், கூட்டுறவுக் கல்வி நிதிக்கும் வசூலித்து அதனைப் பராமரித்து வருகிறது. இந்த நிதி, கூட்டுறவு ஆராய்ச்சி, உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல், கல்வி, பயிற்சி மற்றும் கூட்டுறவு தொடர்பான செய்திகளைப் பரப்புதல் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படுகிறது.

## 2. கூட்டுறவுப் பயிற்சி

மாநிலத்தில் 20 கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் அங்கங்களாக செயல்பட்டு வருகின்றன. இப்பயிற்சி நிலையங்கள், வகுப்பறை பயிற்சி பெறாத கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு அஞ்சல்வழிக் கல்வி மூலம் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சியினை அளித்து வருகின்றன. இப்பயிற்சி நிலையங்கள் கூட்டுறவுத்துறைப்

பணியாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் பயன்பெறும் வகையில் குறுகியகாலப் பயிற்சிகளையும் நடத்துகின்றன. 2014–15ஆம் ஆண்டில், 20 கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்களில் 927 மாணவர்கள் முழு நேரக் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி வகுப்பில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் மற்றும் 1,861 மாணவர்கள் அஞ்சல்வழி கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி வகுப்பில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## 3. தொழிற் கல்வி

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் மூன்று கூட்டுறவுத் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் பர்கூர், பட்டுக்கோட்டை மற்றும் அருப்புக்கோட்டை ஆகிய இடங்களில் நடத்தப்பட்டு வருகிறது. இக்கூட்டுறவுத் தொழிற் பயிற்சி நிலையங்களில் கணினி தொழில்நுட்ப உதவியாளர் பயிற்சி (COPA), நகை மதிப்பீட்டாளர் பயிற்சி, தையற்கலை, மின் பழுதுபார்த்தல், சமையல் கலை கைவினைஞர் பயிற்சி ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 2014–15இல், மார்ச் முடிய, 474 மாணவர்கள் தொழிற்பயிற்சி நிறுவனத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடியில் நடத்தப்படும் கூட்டுறவு தொழில்நுட்பக் கல்லூரியில் இயந்திரப் பொறியியல், கணினி பொறியியல், மின்சாரம் மற்றும் மின்னணு பொறியியல் பட்டயப் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2014–15 ஆம் ஆண்டில், 31.03.2015 வரை 651 மாணவர்கள் மேற்காணும் பட்டயப் பயிற்சியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.



## 4. உயர் பட்டயப் பயிற்சி மற்றும் குறுகியகாலப் பயிற்சி

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், தேசிய கூட்டுறவு பயிற்சிக் குழுவால் (புதுடெல்லி) மதுரை மற்றும் சென்னையில் நடத்தப்பட்டு வரும் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையங்களுக்கு நிதி உதவி அளித்து வருகிறது. இப்பயிற்சி நிலையங்கள் கூட்டுறவு மேலாண்மையில் உயர் பட்டயப்பயிற்சி அளித்து வருகின்றன. இவை கூட்டுறவுத்துறை பணியாளர்களுக்கும், கூட்டுறவு நிறுவனப் பணியாளர்களுக்கும் பல குறுகியகாலப் பயிற்சி வகுப்புகளையும் நடத்தி வருகின்றன. 2014–15ல், 2,903 பணியாளர்கள் குறுகிய காலப் பயிற்சி பெற்றுள்ளனர். இந்த இரு மேலாண்மை நிலையங்களும் வணிக மேலாண்மையியல் முதுகலை பட்டப்படிப்பை அளித்து வருகின்றன.

## 5. சமையல்கலை கைவினைஞர் பயிற்சி

சமையல் கலை கைவினைஞர்களை உருவாக்கும் பொருட்டு ஒன்பது கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்களில் சான்றிதழுடன் கூடிய சமையல் கலை கைவினைஞர் (பொது) பயிற்சி அளிக்கப்படுகின்றன. இதுவரை 61 மாணவர்கள் பயிற்சியில் சேர்ந்துள்ளனர். இவர்களுக்கான வேலைவாய்ப்புகள் ஊக்கமளிப்பதாக உள்ளன. மேலும், அனைத்துக் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்களிலும் கோவையிலுள்ள பாரதியார் பல்கலைக் கழகத்துடன் இணைந்து வணிகவியல் மற்றும் வணிக மேலாண்மையியல் பட்டப்படிப்பு, வணிக மேலாண்மை மற்றும் கணினிப் பயன்பாட்டில் முதுகலை பட்டப்படிப்பு ஆகியன அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது 505 மாணவர்கள் தொலைதூர கல்வி மூலம் பட்டப்படிப்பிற்கு சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 6. சில்லறை விற்பனையாளர் விற்பனைத் திறன் மேம்பாட்டு பயிற்சி

கிராமப்புறங்களில் 18 வயது முதல் 45 வயது வரை உள்ள எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற இளைஞர்கள் மற்றும் மாணவிகள் வேலைவாய்ப்பு பெறத்தக்க வகையில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகத்துடன் இணைந்து சில்லறை விற்பனையாளர் விற்பனைத் திறன் மேம்பாட்டு பயிற்சியினை, கட்டணம் ஏதுமின்றி நடத்தி வருகின்றது. தமிழ்நாடு அரசு இப்பயிற்சிக்கு ரூ.237.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் 20 கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் மற்றும் சென்னை, நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிலையத்தின் மூலம் இப்பயிற்சி 6.02.2014 முதல் நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சியானது 10 நாள் வகுப்பறை பயிற்சியும், 5 நாள் செயல்முறை பயிற்சியும் கொண்டதாகும். இதுவரை 20 கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையங்களில் 5,080 பேர் பயிற்சி முடித்துள்ளனர். 10,000 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும் வரை இப்பயிற்சி தொடர்ந்து நடத்தப்படவுள்ளது. இப்பயிற்சியில் பயிற்சி பெறுபவர்கள் தனியார் நிறுவனங்கள், சிறப்பங்காடி, சுயசேவைப் பிரிவு ஆகியவற்றில் விற்பனையாளர்களாக சேர சிறந்த வாய்ப்புகள் உள்ளன.



## 7. பல்கலைக் கழகங்களில் கூட்டுறவு ஆராய்ச்சி

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவில் ஆராய்ச்சி மேற்கொள்ள மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், பெரியார் பல்கலைக் கழகம் மற்றும் காந்திகிராம் கிராம பல்கலைக் கழகம் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் ரூ.5 இலட்சம் வைப்புத் தொகையை வைத்துள்ளது. இதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை மூலம் கூட்டுறவு மற்றும் அதன் தொடர்புடைய இனங்களில் ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதுவரையிலும் 21 ஆராய்ச்சித் திட்டங்களுக்காக உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

## 8. கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியின் பயன்பாடு

கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் நிகர இலாபத்தில் 3% தொகையை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக்கு அளிக்கின்றன. இந்நிதி, கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக் குழுவின் ஒப்புதல் பெற்று விடுவிக்கப்படுகிறது. கூட்டுறவு ஆராய்ச்சிக்கு மானியமாகவும், அதே சமயம் கூட்டுறவு வளர்ச்சிக்கு வட்டியில்லாக் கடனாகவும் நிதியுதவி வழங்கப்படுகிறது. நான்காண்டுகளில் 2011–12 முதல் 2014–15 முடிய, ரூ. 29.65 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், 2011–12 முதல் 2014–15 வரை, ரூ. 67.83 கோடி வட்டியில்லா கடனாகவும்,

விடுவிக்கப்பட்டுள்ளது. இத்தொகை கூட்டுறவுச் சங்கங்களில் பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை கட்டுதல், நுகர்வோர் சுய சேவைப் பிரிவை நவீனப்படுத்துதல், வங்கிகளை நவீனப்படுத்துல் மற்றும் கணினிமயமாக்குதல், அலுவலகக் கட்டடம் கட்டுதல், துரித சிப்பமிடும் கருவிகள் வாங்குதல், எடையிடும் இயந்திரம் அமைத்தல், பதனிடும் அலகுகள் அமைத்தல், கரும்பு அறுவடை இயந்திரம் வாங்குதல், கூட்டுறவு வளாகம் கட்டுதல், நெசவாளர்களுக்கு கைத்தறி மற்றும் பெடல் தறிகளை வழங்குதல் போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படுகிறது.

## 9. கூட்டுறவு கல்வி நிதியின் பயன்பாடு

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுறவு கல்வி நிதிக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் நிகர இலாபத்தில் 2% தொகையை அளிக்கின்றன. இந்நிதியிலிருந்து கூட்டுறவு கல்வி மற்றும் பயிற்சி, கூட்டுறவு பிரச்சாரம் மற்றும் கூட்டுறவு விளம்பரம் போன்ற பணிகளுக்கு கூட்டுறவு கல்வி நிதிக் குழுவின் அனுமதி பெற்று நிதியுதவி விடுவிக்கப்படுகிறது. நான்காண்டுகளில், 2011–12 முதல் 2014–15 வரை, ரூ.27.51 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது. இந்நிதி கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கும், துறை அலுவலர்களுக்கும் குறுகிய காலப் பயிற்சிகள் நடத்துதல், மாவட்டங்களில் உறுப்பினர் கல்வித் திட்டம், சிறப்பு உறுப்பினர் கல்வித் திட்டம் மற்றும் இளைஞர் ஈர்ப்பு முகாம்கள் நடத்துதல் மற்றும் அகில இந்திய கூட்டுறவு வார விழாக்கள் கொண்டாடுதல் ஆகியவற்றிற்கும் பயன்படுகிறது. மேலும், புதிதாக பொறுப்பேற்றுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள்,



தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் அனைவரும் கூட்டுறவு மேலாண்மையில் நிபுணத்துவம் பெற மூன்று கட்டமாக பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டது.

## 10. பணியாளர் பயிற்சி

விற்பனையாளர் மற்றும் கட்டுநர்களை ஊக்குவிக்கவும், நுகர்வோர்களிடையே நல்லுறவை ஏற்படுத்தவும், உத்வேகத்துடன் செயல்படுவதற்காகவும் மாவட்டம் வாரியாக கூட்டுறவுத்துறையில் பயிற்சிகள் நடத்தப்பட்டது. இப்பயிற்சியில், பணியாளர்கள் மனஅழுத்தம் இன்றி பணியில் ஈடுபாட்டுடன் செயல்படுவதற்கும், நுகர்வோருடன் நல்லமுறையில் அணுகுவதற்கும், சிறப்பாக பணியினை மேற்கொள்ளவும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டது. சிறந்த முறையில் பணியாற்றிய விற்பனையாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, இப்பயிற்சி பட்டறைகளில் கௌரவிக்கப்பட்டனர். இதே போன்று, கூட்டுறவுத் துறையின் உயர் அலுவலர்களுக்கும், ஊக்கப்படுத்துதல், மன அழுத்தத்தைக் கையாளுதல், நேர மேலாண்மை மற்றும் ஓர் அணியாக பணியாற்றுதல் தொடர்பாக பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.

இயல் – VI

## கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்

தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 14 ஆண்டுகளுக்கும் மேலாக தேர்தல் நடைபெறாமலிருந்த நிலையில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 14 பிற செயற்பதிவாளர்கள் ஆகியோரின் கட்டுப்பாட்டில் செயல்படும் 23,661 கூட்டுறவுச் சங்கங்களுக்கு தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தால் தேர்தல் நடத்தப்பட்டு, 2,32,642 நபர்கள் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 33,761 நபர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், 64,849 நபர்கள் பெண்கள் ஆகும். இத்தேர்தலின் மூலம் மொத்தம் 23,657 நபர்கள் தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 1,545 நபர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தை சார்ந்தவர் ஆவர். 3,056 நபர்கள் பெண்கள் ஆவர். தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த நிர்வாகிகள் கூட்டுறவு இயக்கத்திற்கு புதிய உத்வேகம் அளித்துள்ளனர்.



இயல் – VII

## ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

1. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் என்பது ஒரு மாவட்டத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு நிறுவனங்களின் முழுமையான வளர்ச்சிக்காக செயல்படுத்தப்படும் திட்டம் ஆகும். இத்திட்டம் மாநில அரசு மற்றும் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாட்டை மேம்படுத்த தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கித் தருவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். பல்வகை கூட்டுறவுச் சங்கங்களின் வியாபார வளர்ச்சிக்காக, பங்குமூலதனம் மற்றும் நடைமுறை மூலதனத்தை அதிகரிக்கவும் இத்திட்டத்தின் மூலம் நிதி உதவி அளிக்கப்படுகிறது. கூட்டுறவு சங்கப் பணியாளர்களின் மேலாண்மை செயல்திறனை ஊக்குவிக்க, பல்வேறு பயிற்சிகளும் இத்திட்டத்தின் வாயிலாக அளிக்கப்படுகின்றது.

2. தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் 1989 இல் துவக்கப்பட்டு, இதுவரை 22 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு உள்ளது. இந்த 22 மாவட்டங்களில், ரூ.264.84 கோடி, கூட்டுறவு சங்கங்களின் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக செலவிடப்பட்டுள்ளது. தற்போது திண்டுக்கல், திருநெல்வேலி, கரூர், நாகப்பட்டினம், வேலூர் மற்றும் நீலகிரி ஆகிய ஆறு மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, ரூ.167.62 கோடி இம்மாவட்டங்களில் செயல்படும்

கூட்டுறவு சங்கங்களின் மேம்பாட்டிற்காக செலவிடப்பட்டுள்ளது.

**3.** புதுப்பிக்கத்தக்க பசுமை ஆற்றலை ஊக்குவிக்கவும், படிமம் சார்ந்த ஆற்றலை நம்பி இருப்பதை குறைக்கவும், வேலூர், கரூர், திண்டுக்கல், நாகப்பட்டினம் மற்றும் சிவகங்கை ஆகிய **5** மாவட்டங்களில் உள்ள **118** கூட்டுறவு சங்கக் கட்டடங்களில், ரூ.**2.29** கோடி செலவில், ஒரு கிலோ வாட் முதல் ஐந்து கிலோ வாட் வரை உற்பத்தித் திறன் கொண்ட ஒளி மின் அழுத்த சூரிய ஒளி வாங்கிகள் அமைக்கப்பட்டன. இச்சூரிய ஒளி வாங்கிகள் கூட்டுறவு சங்கங்களுக்கு தடையற்ற மின்சாரத்தை வழங்கி, மின்கட்டண செலவையும் வெகுவாக குறைத்துள்ளது.

**4.** கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், பால் கூட்டுறவுச் சங்கங்கள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திக் கொள்ளவும், நடைமுறை மூலதனத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளவும் தமிழ்நாடு அரசு, கடன், பங்குத் தொகை மற்றும் மானியமாக நிதி உதவி வழங்கி, பின்னர் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து மறுநிதியாக பெறுகிறது.

**5.** நாமக்கல், திருவள்ளூர், கன்னியாகுமரி மற்றும் சென்னை ஆகிய நான்கு மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த நான்கு மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டவுடன், தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த



கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் முதல் கட்டம் நிறைவு பெறும்.

**6.** இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை **10** மாவட்டங்களில் செயல்படுத்த, ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## முடிவுரை

கூட்டுறவு நிறுவனங்கள், மாநிலத்திலுள்ள அனைத்து தரப்பு மக்களுக்கும், குறிப்பாக, ஊரகப் பகுதியில் உள்ள மக்களுக்கு பல்வேறு கடன் வசதிகளை அளித்தும், சிறு குறு விவசாயிகளுக்கு கடன்கள் வழங்கியும், நுகர்வோர் மற்றும் பொதுமக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு மகத்தான சேவை புரிந்து வருகின்றன. மேலும், கூட்டுறவு அமைப்புகள் சந்தைக் குறுக்கீடு நடவடிக்கைகள் மூலம் வெளிச் சந்தை விலையைக் கட்டுப்படுத்தும் முக்கிய காரணியாக விளங்கிவருவதுடன், விவசாயிகளின் வேளாண் விளை பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு சிறந்த தளம் அமைத்து தருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழும், தமிழக மக்களின் பங்களிப்புடனும், மாநிலத்தில் கூட்டுறவு இயக்கம் அனைத்து வகையிலும் புதிய உயரத்தை எட்டியுள்ளது. மாநிலத்தில் பல்வேறு புதுமையான நலத் திட்டங்களை செயல்படுத்தி வருவதுடன், குறிப்பாக சமூகத்தில் நலிவடைந்த பிரிவினரின் மேம்பாட்டிற்காக கூட்டுறவு நிறுவனங்கள் தொடர்ந்து அரும் பணியாற்றி வருகின்றன.

**செல்லூர் கே.ராஜு**
**கூட்டுறவுத் துறை அமைச்சர்**